காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 16, சனிக்கிழமை 31.12.2016 | கதிர் 56

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

பேசித் தீர்வு காண முயன்றேன்; சம்பந்தன்தான் வரவேயில்லை!

இப்படிக் காரணம் கூறுகின்றார் மஹிந்தர்

கொழும்பு, டிசெம்பர் 31

போருக்குப் பின்னர் தாம் அரசியல் தீர்வுக்குச் செல்ல விரும்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த போதிலும், அவர்கள் தம்முடன் கலந்துரையாடக் கூட விரும்பவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பில்புதனன்று இரவு வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது, போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டைஒன்றுபடுத்தத்தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுவது குறித்து, மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்கப்பட்டது.

அதில் கொஞ்சம் உண்மை உள்ளது என்று மஹிந்த ராஜ

பக்கம் 19 »»»

சம்பந்தனின் புகைப்படம் வவுனியாவில் எரிப்பு!

வவுனியா டிசெ.31

காணாமற்போனோரின் உறவினர்கள் வவுனியாவில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனின் உருவப்படத்தை தீயிட்டு எரித்தனர்.

நேற்றைய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், காணாமற்போன தமது உறவினர்களைக் கண்டுபிடித்து

பக்கம் 19 »»»

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்குக் காரணம் அமெரிக்காவும் புலம்பெயர் வாழ் தமிழர்களும்!

இப்போது தான் மஹிந்தருக்கு இது புரிகிறதாம்

கொழும்பு, டிசெ.31

இலங்கையில் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் இந்தியா பிரதான பங்கை வகிக்கவில்லை என்றும், அமெரிக்காவும்புலம்பெயர் தமிழர்களுமே பிரதான பங்கை வகித்தார்கள்என்றும்முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில்புதனன்று வெளிநாட்டுசெய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்தஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் பிரதான பங்கை இந்தியா வகிக்கவில்லை. அமெரிக்காவும், புலம்பெயர் தமிழர்களுமே பிரதான பங்கு வகித்த

பக்கம் 19 »»»

இராஜாங்க அமைச்சர் பிரியங்கர அமைச்சர்பதவியைத்துறக்கிறார்?

ஐ.தே.கவுடன் சு.க. சேர்ந்து செயற்பட முடியாதாம்!

கொழும்பு டிசெ.31

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தனது அமைச்சுப் பதவியை ராஜினாமாச் செய்யத் தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

தமதுசிறிலங்காசுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்க முடியாதுஎன அதிருப்திவெளியிட்டே அவர் தனது பதவியை

பக்கம் 19 »»»

அளப்பு அருணாசலம்

அப்ப... பதினாறு சுற்றுப் பேசியும் எதுவும் நடக்கேல்ல... இப்ப புதுசுத்துமாத்து கதைவிடுறார்...!

'எட்கா' ஒப்பந்தம்: கொழும்பில் பேச்சு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார,தொழில்நுட்பஅபிவிருத்தி தொடர்பான உடன்படிக்கையின் ('எட்கா' உடன்படிக்கையின்) 3ஆம்கட்டப் பேச்சுக்கள் ஜனவரி 4 மற்றும் 5ஆம் திகதிகளில் கொழும்பில்நடைபெறவுள்ளன.

அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த இந்திய வர்த்தக அமைச்சர் நிர்மலா சித்தராமன் இலங்கை அரசுடன் இந்த ஒப்பந்தம் குறித்து பேச்சு நடத்தியிருந்தார் என்பது தெரிந்ததே. இந்த ஒப்பந்தத்துக்கு இலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகள் சில கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவது தெரிந்ததே.

கிழக்கு 'எழுக தமிழ்' எழுச்சி நிகழ்வில் முஸ்லிம்களும் பங்குபற்ற வேண்டும்!

அழைப்பு விடுக்கின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

கொழும்பு, டிசெ.31

சிங்கள பௌத்த மேலாதிக்கத்திலிருந்து எமது மொழியையும், மண்ணையும் பாதுகாத்துக் கொள்வதற்கு கிழக்கு மாகாண தமிழ் மக்கள் மாத்திரமன்றிதமிழ்பேசும்முஸ்லிம் மக்களும் 'எழுக தமிழ்' பேரணியில் பங்கேற்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி மட்டக்களப்பில் 'எழுக தமிழ்' நிகழ்வை நடத்துவதற்கு தமிழ் மக்கள் பேரவை ஒழுங்கு செய்

பக்கம் 19 »»»

சத்தம் சந்தடியில்லாமல்

சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கை!

யாழ்ப்பாணம், டிசெ.31

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களை ஆட்சேபித்து வடமாகாண பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் வெளிக்களப் பரிசோதனைக்குச் செல்லாமல் கடமை நேரங்களில் கடமைப் பதிவு ஆவணங்களில் கையெழுத்திட்டுவிட்டு அலுவலகத்திலேயே தரித்து நிற்கும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

கடந்த பத்து நாள்களுக்கு மேலாக முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையால் சமூகத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பக்கம் 19 »»»

இந்திய மீனவரின் படகுகள், கருவிகளை இலங்கை விடுவிக்கவே மாட்டாதாம்!

அடித்துக் கூறுகின்றார் கடற்றொழில் அமைச்சர் அமரவீர

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களது படகுகளையோ மீன்பிடி உபகரணங்களையோ நாம் அவர்களுக்குத் திருப்பிக் கையளிக்கப் போவதில்லை என கடற்றொழில்மற்றும்நீரியல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்தஅமரவீரதெரிவித்துள்ளார்.

கிரியங்கள்ளிய நீர்த்தேக்கத்தை மையமாகக் கொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வள்ளங்கள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே

பக்கம் 19 »»»

பல்கலைக்கழக மாணவர் படுகொலை: பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

அடுத்த வழக்குத் தவணை ஜனவரி 13

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரைச் சுட்டுப் படுகொலைசெய்தார்கள்என்றசந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஐந்து பொலிஸாரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. இதன்படி அவர்கள் ஜனவரி மாதம்13ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி இரவு கொக்குவில் பகுதியூடாகச் சென்றுகொண்டிருந்த யாழ்.பல்லைக்கழக மாணவர்கள் இருவரை பொலிஸார் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

ஆரம்பத்தில் இந்த சம்பவம் ஒரு விபத்து என பொலிஸார் தெரிவித்த போதிலும் மாணவர்களின் சடலங்கள் மீது இடம் பெற்றபரிசோதனையின்போது ஒருவருடையசடலத்தில்துப்பாக்கிச்சூட்டுக்காயம்காணப்பட்டது.

இதனை அடுத்து, மாணவர்கள் உயிரிழந்த பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது தவணை அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றையவழக்குத்தவணையின்போது அவர்கள் யாழ்.நீதிவான் நீதிமன்றில், பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் அவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம)

மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ.31

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்தடை ஏற்படுத்தப்படுவது குறித்து மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை ஞாயிறு காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில் டாக்கர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை ஆகிய பிரதேசங்களிலும்நாளை மறுதினம் திங்கட்கிழமை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் கல்மடுவில் இருந்து சின்னவயலங்கட்டு வரையுள்ள பகுதிகளில் மின்தடை ஏற்படும். (இ)

குடும்பத் தகராறில் தனக்குத் தானே தீ மூட்டிய இளைஞர் உயிரிழந்தார்

குடும்பத் தகராறு காரணமாகத்தனக்குத்தானேதீ மூட்டியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் மரண விசாரணை அதிகாரி எஸ்.ஈ.குணகுமார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்.

மரணவிசாரணையின்போது உயிரிழந்தவரின் மனைவி ரமேஷ் அனிதா சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தவை வருமாறு:-

"எனது கணவரான 35 வயதுடைய சிவபாலன் ரமேஷும் நானும் திருமணம் முடித்து பதினொரு வருடங்களாகின்றன. எங்களுக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். நாங்கள் மன்னார் எழுத்தூர் லூசியா வீதியில் வசித்து வருகின்றோம். எனது கணவர் மேசன் வேலை செய்பவர். அவருக்குக்குடிப்பழக்கம் உண்டு. குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தால் எங்கள் குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் வருவது வழமையாகும்.

"சம்பவம்நடந்தகடந்தஞாயிற்றுக்கிழமை எனது கணவர் தலைமன்னாரிலுள்ள தனது தாயாரின் வீட்டுக்குச் சென்று விட்டு பிற்பகல் வீடு திரும்பினார். மதுபோதையில் வந்து என்னிடம் பணம் கேட்டுத் தகராறுபண்ணினார். நான்பணம் கொடுக்க மறுத்த போது அவர் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டினார்.

"உடனே நாங்கள் அவரைக் காப்பாற்றி அன்றைய தினமே மன்னார் பொது வைத்தியசாலையில்சேர்த்தோம். அங்கு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டநிலையில்சிகிச்சைபலனின்றி கடந்த புதன்கிழமை அவர் உயிரிழந்தார்.'- என்று தெரிவித்தார். (112)

சாரதி நித்திரை தூங்கியமையால் பள்ளத்தில் பாய்ந்தது ஹயஸ்!

யாழ்ப்பாணம், டிசெ.31

சுற்றுலாப் பயணிகளுடன் சென்றஹயஸ்வாகனம்ஒன்று அதனைச் செலுத்தி வந்த சாரதி தூங்கியமையால் பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் பொன்னாலை வீதியில் வலித் தூண்டல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கீரிமலையில் இருந்து மாதகல் ஜம்புகோளப்பட்டினம் பகுதியைப் பார்வையிடுவதற்குச் சென்ற சுற்றுலாப்பயணிகளின் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். - பொம்மைவெளியில் விழும் நிலையில் மின்கம்பம்

பொதுமக்கள் மத்தியில் அச்சம்



யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பிரதான வீதியில், பொம்மைவெளிப் பிரதேசத்தில் உள்ள மின்கம்பம் ஒன்று எந்த நேரமும் முறிந்து விழக்கூடிய ஆபத்தான நிலையில்உள்ளது. இந்தவிடயத்தில் இலங்கை மின்சார சபை விரைந்து கவனம் எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

இந்த மின்கம்பம் சரிபாதியாக உடைந்த நிலையில் இணைப்புக்கம்பிகளின்துணையுடனே நிமிர்ந்து நிற்கின்றது. கடந்த 'வர்தா' புயலின் போது இது முறிந்து வீழ்ந்துவிடுமோ என்ற அச்சத்தில் பலர் அந்த வீதியால் பயணிப்பதையே நிறுத்திக்கொண்டனர் எனத் தெரியவருகின்றது.

எதிர்வரும் நாள்களில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை ஏற்பட்டால் இந்த மின்கம்பம் முறிந்து வீழ்ந்து பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்று பிரதேச மக்களும் வீதியால் பயணிக்கும் பொது மக்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் இலங்கைமின்சாரசபைஉரிய கவனம் எடுத்து உடனடியாக அந்த மின்கம்பத்தைச் சீர்செய்ய வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-10)

திருவாசகம் முற்றோதல்

சுழிபுரம், டிசெ.31

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை ஞாயிறு காலை 6 மணிக்கு திருவாசகம் முற்றோதல் ஆரம்பமாகும்.

அதிகாலை வழிபாடுகளைத் தொடர்ந்துதிருவாசகம்முற்றோதல் ஆரம்பமாகும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

வெற்றிலைக்கேணிக்காட்டில் கசிப்பு காய்ச்சியோர் கைது!

கிளிநொச்சி, டிசெ.31

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி பகுதியில் உள்ள காடு ஒன்றுக்குள் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தியில்ஈடுபட்டஇருவர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து சந்தேகத்துக்கிடமான காடு பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது என பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.டபிள்யூ ரஞ்சன பண்டார தெரிவித்துள்ளார்.

இதன்போதுபொலிஸாரைக் கண்டவுடன் ஒருவர் காடு வழியாகத்தப்பிச்சென்றுள்ளநிலையில் இருவரைக் கைது செய்துள்ளனர் என பொறுப்பதிகாரி கூறினார்.

இதன் போது 3லட்சத்து 29 ஆயிரத்து 215மில்லிலீற்றர் கோடா, 24ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு என்பவையும், கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்டசட்டி, பானை, பரல், செப்புகம்பிகள், வயர் என்பவையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான இருவரும் வெற்றிலைக்கேணிப்பகுதியைச்சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காடு வழியாகத்தப்பிச்சென்ற ஒருவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் ரஞ்சன பண்டார தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தனியார் வகுப்புகளை மாலை 5.30 இற்குப் பின் நடத்தத் தடை

கிளிநொச்சி, டிசெ.31

கிளிநொச்சி மாவட்டத்தில் மாலை நேரத்தில் தனியார் வகுப்புகள் நடத்துவது தடை செய்யப்பட உள்ளது. பொலிஸ் தரப்பினரும் நன்னடத்தை அதிகாரிகளும் இணைந்து அதனைச் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகி வருகின்றனர்.

உருத்திரபுரத்தில், தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பிய மாணவிகள், இளைஞர்கள் சிலரால் துன்புறுத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து மாலை ஐந்தரை மணிக்குப் பின்னர் தனியார் வகுப்புக்களை நிறுத்த வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றன எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேலும், தனியார் வகுப்புக்கள் நடத்துவதற்கு, சம்பந்தப்பட்ட பிரதேசசபைகளில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

மாம்பழம் சந்தியில் கைக்குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ.31

அரியாலைமாம்பழம்சந்திப் பகுதியில்உள்ளதோட்டக்காணி ஒன்றில் இருந்து நேற்று கைக்குண்டுஒன்றுகைப்பற்றப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர் நிலத்தைப் பண்படுத்திய போது இந்தக் கைக்குண்டு தென்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்துவிசேட அதிரடிப்படையினருடன்சென்ற பொலிஸார் கைக்குண்டை மீட்டனர்.

மதுபோதையில் விபத்துக்குள்ளான விமானப்படை வீரர் உயிரிழப்பு!

வவுனியா, டிசெ.31

வவுனியா விமானப்படை தளத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வருட இறுதி களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட விமானப்படை வீரர் ஒருவர் மது போதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி விபத்துக்குள்ளாகி மரணமடைந்தார்.

இரவு 9.30 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா விமானப்படைத் தளத்தில் இடம்பெற்ற வருட இறுதிகளியாட்டநிகழ்வில்பங்கு பற்றியவிமானப்படைத்தளத்தில் பணியாற்றும் அருணசாந்த (வயது-31) என்றவிமானப்படை வீரர், நிகழ்வை முடித்துக் கொண்டு மதுபோதையில் படைத்தளப் பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளைச் செலுத்தினார் என்றும், அப்போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்றும் கூறப்பட்டது.

விபத்தில்விமானப்படைவீரர் பலத்த காயமடைந்து மரணமடைந்தார். இது தொடர்பில் வவுனியாப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் பழைய மின்கம்பங்களை அகற்றுக!

யாழ்ப்பாணம், டிசெ.31

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வீதியில் பல மாதங்களாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பழுதடைந்த மின்கம்பங்களால் ஆலயத்துக்கு வரும்அடியார்களுக்குஇடையூறாக உள்ளது என்று ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி கஜமுகா சூரசம்ஹாரம் நடைபெறவிருப்பதால் அடியார்களின் நலன் கருதி மின் கம்பங்களை விரைவாக அகற்றுமாறு இலங்கை மின்சார சபையை அது கோரியுள்ளது.

ஆலய வீதியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் மின் கம்பங்கள் அகற்றப்பட வேண்டிய அவசியம் குறித்து ஆலய பரிபாலனசபைச் செயலாளர் ஆ.சி.கணேசவேல் இலங்கை மின்சார சபை நிறை வேற்றுப் பொறியிளாளருக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். (இ-59)

கிளிநொச்சி வர்த்தக சங்கக் கூட்டம்

கிளிநொச்சி, டிசெ.31

கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

இன்றைய கூட்டத்தில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்படுவதோடு புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

காணாமல் போனவர்களின் உறவினர்கள் வவுனியாவில் அடையாள உண்ணாவிரதம்

ஜனவரி 15 வரை அரசுக்கு காலக்கெடு

வவுனியாவில்...

திருகோணமலையில்...

வவுனியா, டிசெ.31

காணாமல் போனவர்களின் உறவினர்கள் வவுனியாவில் நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் மற்றும் பிரஜைகள் குழு என்பவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகம் அருகில் உள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு முன்பாக முற்பகல் 10 மணியில் இருந்து மாலை 4 மணிவரை இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

கடந்த யுத்த காலத்தின் போது காணாமல் போன மற்றும் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் போன தமது உறவுகள் குறித்து அரசு உரிய பதிலை அளிக்க வேண்டும் என்று கோரியே அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவர் ஆ.ஜெயவனிதா கருத்து தெரிவிக்கையில்:-

யுத்தம் முடிவடைந்து 8 வருடங்கள் ஆகின்ற போதும் காணாமல் போன எமது பிள்ளைகள், உறவுகள் தொடர்பில் அரசு உரிய பதிலை வழங்கவில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நாங்கள் நம்பிக்கையோடு இருந்த இந்த அரசு உரிய பதிலை வழங்காது இழுத்தடிப்பு செய்து வருகின்றது.

இதனால் நாம் இன்று (நேற்று) அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளோம்.

இதன் மூலம் இந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு ஒரு முடிவைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காத பட்சத்தில் எமது பிள்ளைகளைத் தேடி நாம் தினம் தினம் சாவதை விட ஜனவரி 20 ஆம் திகதி முதல் சாகும் வரையிலான தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.- எனத் தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் காணாமல் போனோரின் உறவுகள் பலரும் கலந்து கொண்டு தமது ஆதங்கங்களை கண்ணீர் மல்க ஊடகங்கங்கள் முன்பாகத் தெரிவித்தனர்.

திருகோணமலையிலும் உறவுகள் ஆர்ப்பாட்டம்

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதிகோரி திருமலையிலும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

கிழக்கு ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் திருகோணமலை மாவட்ட மக்கள் நேற்று வெள்ளிக் கிழமை ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரை கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரனிடம் கையளித்தனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு:-

அரசு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் காலத்தைக் கடத்தாமல் எமது உறவுகளை கண்டறியும் நடவடிக்கைகளை காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும். நாங்கள் கேட்பது எமது உறவுகளை மீட்டெடுப்பதற்கான நியாயத்தை மட்டுமே.

இந்த நாசகார செயற்பாடுகளில் ஈடுபட்ட தரப்பினர் சிலர் இன்னும் நம் கண்முன் நடமாடுகின்றனர். இவர்கள் கப்பம் கோரும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். எமது கோரிக்கைகளை ஏற்று அரசு இவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவ தற்கும், உரிய தண்டணை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான மரணச் சான்றிதழ்களையோ, கடத்தப்பட்டோர் சான்றிதழ்களையோ பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. அவ்வாறு பெற்றுக் கொள்வதாக இருந்தால் இதற்கான நியாயமான காரணங்களை அரசு முன்வைக்க வேண்டும்.

அதன் பின்னர் அந்த ஆவணங்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆலோசிக்க முடியும்.- என்றுள்ளது. (ஐ-ச-100)

புகையிலை நாற்று விற்பனை

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைப் பயிர்ச்செய்கைக்கான நாற்று நடுகை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

புகையிலை நாற்று மேடைகளை அமைத்தோர் ஒரு புகையிலை நாற்றை 23 ரூபா முதல் 43 ரூபாவாக விற்பனை செய்து வருகின்றனர்.

வெளிப்பிரதேசங்களைச் சேர்ந்தோர் நாற்றுக்களைப் பெற்றுக்கொள்வது வழக்கமாகும். ஆனால் இம்முறை புகையிலை நாற்றுக்களைப் பெற்ற விவசாயிகள் எண்ணிக்கை குறைவு எனத் தெரிவிக்கப்பட்டது.(இ-32

வலி. வடக்கு பிரதேச சபை பிரிவில் அனுமதி பெற்றே வேலைத் திட்டம்

செயலாளர் சுட்டிக்காட்டு

சுன்னாகம், டிசெ.31

வலி. வடக்குப் பிரதேச சபை எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைத்தல், கட்டடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன சபையின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலி. வடக்கு பிரதேச சபை செயலாளர் இ.பகீரதன் தெரிவித்துள்ளார்

சபையின் அனுமதி பெறாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நஷ்ட ஈடு இன்றி அகற்றப்படும்.

கட்டட அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு ஒரு வருடத்துக்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக கால நீடிப்பு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-54)

தனியாரிடம் மின் பெற அனுமதி கோரிக் கடிதம்

கொழும்பு, டிசெ.31

தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் பெற்றுக் கொள்வதற்கு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சிடம் இலங்கை மின்சார சபை கடிதம் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டில் வறட்சி காரணமாக மின்சார உற்பத்தி வரையறுக்கப்பட்டுள்ளது. இதனால் மின்சாரத்தை தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளது.

தனியார் மின் உற்பத்திநிறுவனங்களிடம் இருந்து 60 மெகாவோற் மின்சாரம் கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளது.

அத்துடன் மூன்று தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை புதுப்பித்துக் கொள்ளக் கடிதம் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.- என்றுள்ளது.

இந்தக் கடிதம் மின்வலு எரிசக்தி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதா இல்லையா? என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் நாடு முழுவதிலும் உள்ள நீர் மின் உற்பத்தி நிலையங்களில் மின்சார உற்பத்தி பெரியளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

தடை செய்த வலையால் மீன்பிடித்த ஐவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.31

தடை செய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட உள்ளூர் மீனவர்கள் ஐவரை கடற் படையினர் கைது செய்துள்ளனர் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணை கடல் நீரேரி, மற்றும் மண்டை தீவு கடல் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அவர் கூறினார்.

இதன் போது மண்டைதீவு கடலில் மீன்பிடித்த மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த ஒருவரும், பண்ணை கடல் பகுதியில் மீன்பிடித்த நாவந்துறைப் பகுதியைச் சேர்ந்த நால்வருமாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து கைபற்றப்பட்ட சான்றுப் பொருள்கள் யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீனவர்களிடம் யாழ். கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(ஐ-9)

சின்மயா மிஷனில் இசை நிகழ்வு

யாழ்.சின்மயாமிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4மணிக்கு இசை நிகழ்வு நடைபெறும் என்று சின்மயாமிஷன் ஆச்சிரமம் அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா, மெல்போர்ன் நல்லை ஸ்வரலயா இசைக் கல்லூரி மாணவி நிர்மிதா சங்கர் குமார சூரியரின் கர்நாடக இசை நிகழ்வு பக்க வாத்தியம் சகிதம் நடைபெறும். இசைஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஆச்சிரமத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

நல்லாட்சிக்கு நல்ல காலம் இல்லை !

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை அடுத்த ஆண்டு - பிறக்கும் புதுவருடம் - ஒரு தீர்க்கமான, தீர்மானகரமான காலம் என்று இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

2016, இன்று விடைபெறும் போதே அந்தத் தீர்க்கமான கால கட்டத்தின் ஆரம்பம் பற்றிய அறிகுறி - சமிக்ஞை - வெளியாகத் தொடங்கிவிட்டது.

'2017இல் அரசைக் கவிழ்த்து ஆட்சியைப் பிடிப்பேன்!' - என்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கர்ச்சனை அந்த அறிகுறிக்கான கட்டியம்தான்.

2015 இன் தொடக்கத்தில் - தாமே - தமது தலையில் மண் வாரிக் கொட்டியமைபோல நேரத்துடன் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, அதில் தோற்று, தாம் கோட்டை விட்ட ஆட்சியை, நாளை பிறக்கும் புத்தாண்டில் மீளப் பிடிப்பேன் என்று கூளுரைத்திருக் கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

தென்னிலங்கையில் கட்டவிழும் அரசியல் நடவடிக்கைகள், செயற்போக்குகள் மஹிந்த ராஜபக்ஷவின் கூற்று சாத்தியமற்றது என்றோ அல்லது அது, அவரது வெறும் பகல் கனவு என்றோ புறம் ஒதுக்கித் தள்ளிவிடக் கூடியதல்ல என்ற சிந்தனையையே நமக்குத் தந்து நிற்கின்றது.

'நல்லாட்சி அரசு' அமைத்தல் என்ற பெயரில் ஒட்டுப்போடப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தற்காலிகக் கூட்டின் தேன்நிலவுக்காலம் அந்திமத்தை நெருங்கி விட்டது என்றே சொல்லத் தோன்றுகின்றது.

இரு தரப்பினரும், மாறி மாறிக் குற்றம் சுமத்துவதைப் பார்க்கும்போது - பகிரங்கமாக ஒருவரை ஒருவர் சாடுவதை நோக்கும்போது - நல்லாட்சி என்ற கலப்புத் திருமணத்தைப் பிரிப்பதற்கான 'விவாகரத்து நோட்டீஸ்' அனுப்பப்பட்டுவிட்டதாகவே தோன்றுகின்றது.

நல்லாட்சி அரசின் பதவிக் கதிரையின் காலை இழுத்து விழுத்திவிடத் தாம் தயார் என்பதை மஹிந்த ராஜபக்ஷ பகிரங்க மாகப் பிரகடனப்படுத்தி உள்ளமையின் பின்புலத்தில் -

அரசுக் கூட்டின் அங்கத்துவத் தரப்புகளுக்கு இடையிலான உள்முரண்பாடும், குழப்பங்களும் உச்சத்தைத் தொட்டிருக்கும் இந்தச் சூழலில் -

'நல்லாட்சி அரசின்' பிரதான நோக்கமும் இலக்கும் நல்லாட் சியை முன்னிறுத்துவனவாக இருக்கப்போவதில்லை; மாறாக, தன்னைக் கவிழவிடாமல் காப்பாற்றி, இருப்பை ஸ்திரப்படுத் துவதாகவே இருக்கப் போகின்றன!

இருப்பை ஸ்திரப்படுத்துவதாயின் மக்களிடையேயும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் தனக்கிருக்கும் ஆதரவுத் தளத்தைத் தக்க வைப்பதே அதில் பிரதானமானது என்பதால், அதை நோக்கியதாக மட்டுமே 'நல்லாட்சி அரசின்' காய் நகர்த்தல் கள் இனி இருக்கும் என்பதும் உறுதி.

நீண்டகால இனப்பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நீதி செய் வதைவிட, அப்படி நீதி செய்யவே கூடாது என்ற பேரினவாத மேலாதிக்கச் சிந்தனையில் ஊறிக் கிடக்கும் பெரும்பான்மை யினரான சிங்களவர்களே, இன்றைய இக்கட்டு நிலையில் நல்லாட்சி அரசுக்கு முக்கியமாக வேண்டப்படுகின்றார்கள்.

அந்தப் பெரும்பான்மையினரின் ஆதரவுத் தளத்தைத் தம் பக்கம் வைத்திருந்தால் மட்டுமே, தமது அரசு தப்பிப் பிழைத்து, நின்று, நிலைத்து, நீடிக்கும் என்றுணர்ந்துள்ள அரசு, நிச்சய மாக அவர்களைத் 'தாஜா' செய்வதற்கே முன்னுரிமை கொடுக்கும். அவர்களைப் பகைக்கவோ அல்லது சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நீதி செய்வதற்காகப் பெரும்பான்மையினரை எதிர்க்கவோ அரசு முன்வராது. அப்படி நீதி செய்து நியாயத்தை நிலைநாட்டும் திடசங்கற்பமோ, பற்றுறுதியோ, அதற்கான வலிமையோ இன்றைய நிலையில் இந்த நல்லாட்சி அரசுக்கு இல்லவே இல்லை என்பதும் தெளிவு.

இந்தச் சூழலில் ஏமாற்றப்படக் காத்திருக்கும் தமிழர்களின் தலைமை, இன்று என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பானதே.

தமிழ்க் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான ஈ.பி.ஆர். எல். எவின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிடுகின் றமை போல, தீர்வுக்கான யோசனைகளையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் வழிகாட்டல் குழுவில் இருந்து கூட்டமைப்பில் இரு உறுப்பினர்களான சம்பந்தனும் சுமந்திரனும் வெளியே வரவேண்டுமா? முதலில் பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் நேரில் பேசி, தீர்வுக்கான இணக்கம் ஒன்றைக் கூட்டமைப்பு கண்டபின்னர், அந்த முடிவை நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகப் பின்னர் அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவில் மீண்டும் சேர்ந்து கூட்டமைப்பு பணியாற்ற லாமா?

இந்தச் சந்தர்ப்பத்தில் - தெற்கில் அரசியல் நெருக்கடி முற்றி வருகையில்- இந்தக் கேள்வி மிக முக்கியமானதாகும்.

எது, எப்படியென்றாலும், 'நாம் நம்ப நடந்தோம்; நம்பி நடக்க வில்லை' என்பதையும் -

அமைதி முயற்சிகளை - சமாதான எத்தனங்களை - முறித்துக் கொண்டு வெளியேறுபவர்கள் தமிழர்கள் அல்லர், தென் னிலங்கையரே என்பதை நிரூபிக்கும் பொறுப்பையும், தமிழர் தரப்பு இன்று கொண்டிருக்கின்றது. இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டதாகவே தமிழர் தரப்பின் எதிர்கால நடவடிக்கைகள் அமைய வேண்டும்; அமையமுடியும்.

சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம்.

விமர்சனங்களையும் தாண்டி மக்களுக்கு சேவையாற்றுக

பொலிஸ் மா அதிபர் பூஜித வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.31

விமர்சனங்களைத் தாண்டி மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரி வித்துள்ளார்.

மக்களின் இதயங்களை வென்றெடுப்பதற்கு பொலிஸ் துறை யினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

மக்களால் பொலிஸார் விமர்சிக்கப்பட்ட போதிலும் அவர்களின் இதயங்களை வென்றெடுக்க வேண்டியது அனைத்து உத்தியோகத்தர்க ளினதும் கடமை என்று உருக் கமான வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:

''பொலிஸ் உத்தியோகத் தர்கள் கோபப்படக் கூடாது. மக்களை பழி வாங்கக்கூடாது. நாட்டில் யுத்தமோ கடும் போக்குவாதமோ கிடையாது. மக்களுக்கு வேண்டிய பூரண சுதந்திரம் தற்போது காணப் படுகின்றது. அதனைப் பொலி ஸாரே வழங்கி வருகின்றனர்.

நாட்டு மக்கள் எம்முடன் இருக்கின்றனர். மக்களின் இதயங்களை வென்றெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.'' -என்றார். (எ)

முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பில் சகலருடனும் கலந்துரையாடுவோம்

ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இஸ்லாமிய இயக்கங்கள், சிவில் அமைப் புக்களின் பிரதிநிதிகளை கூட்டாகச் சந்தித்து சமகால முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடத் தீர்மானித்தி ருப்பதாக ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாத் தெரிவித்துள்ளது.

சமகால முஸ்லிம்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சில முஸ் லிம் அமைச்சர்களை சந்தித்து கலந் துரையாடப்பட்டதா? என்ற கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக் கும்போதே அதன் பொதுச் செயலாளர் அப்துல் ராசிக் இத னைத் தெரிவித்தார்.

பொது சிவில் அமைப்புக் கள் மற்றும் குறிப்பிட்ட சில முஸ்லிம் அல்லாத நாடாளு மன்ற உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள் ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''முஸ்லிம்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை முஸ்லிம்கள் ஒரே அணியாக ஒன்று திரண்டு எதிர்கொள்வதன் அவசியத்தை இந்தக் கலந்துரையாடல்கள் மூலம் உணர்த்த உள்ளோம். அரசியல் யாப்பு மாற்றம் தேர் தல் முறை, அரசியல் விடயங் கள் தொடர்பாக முஸ்லிம்களின் எதிர்காலத் திட்டங்கள் எவ் வாறு அமைய வேண்டும் என்று ஆராயப்பட வேண் டும்.

தேர்தல் முறை தொடர்பாக முஸ்லிம்களை அறிவூட்டு வதற்கு முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டம், ஊடக சந் திப்பு போன்றவற்றையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள் ளது.''-என்றார் (எ)

சத்திரசிகிச்சை உபகரணங்களின் விலையைக் குறைக்க தீர்மானம்

சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, டிசெ.31

சத்திரசிகிச்சை உபகரணங் களின் விலைகளைக் குறைக்க சுகாதார அமைச்சு தீர்மானித் துள்ளது.

இதற்குத் தேவையான பொறிமுறையைத் தயாரிக்கு மாறு தேசிய ஒளடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு அமைச்சர் பணிப்புரை விடுத் துள்ளதாகச் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக கண் வில்லைகளுக்கான விலை யைக் குறைப்பதற்கு திட்ட மிடப் பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து 6 ஆயி ரம் ரூபாவுக்கு கண் வில்லை களைக் கொள்வனவு செய்து, நோயாளர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வ தாக முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என்று சுகாதார அமைச் சின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய, கண் வில்லை களுக்கான விலை நிர்ண யிக்கப் படவுள்ளதோடு, கண் வில்லை களை 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்று சுகா தார அமைச்சர் ராஜித சேனா ரத்ன குறிப்பிட்டுள்ளார்.

(எ)

நன்னீர் மீன்பிடியை அதிகரிக்க நீரியல் வள அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, டிசெ.31

நன்னீர் மீன் உற்பத்தியை எதிர்வரும் 2 வருடங்களுக்குள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன்களாக அதி கரிக்கச் செய்வதற்கான திட் டத்தைக் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

அமைச்சர் மஹிந்த அமர வீரவின் எண்ணக்கருவுக் கமைய 'வாவியுடன் பயணம்' எனும் தலைப்பின் கீழ் கடற் றொழில் நீரியல் வளங்களை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத் தப்பட்டுள்ளது.

மீன் மற்றும் நீர்வாழ் உயி ரின அபிவிருத்திக்காக அரசு 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதியை ஒதுக் கியுள்ளது.

நீரியியல் வளங்களின் அபிவிருத்திக்காக பெருந் தொகை நிதி இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக் கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நன்னீர் மீன் உற்பத்தி 75 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும். நாட் டைச் சுற்றிப் பெரிய கடல் வளம் இருந்த போதிலும் வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட ரின் மீன் மற்றும் மீன்களின் தொகை 12 ஆயிரம் மெற்றிக் தொன் னாகும் என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

(எ)

மருதடி முதியோர் சங்க ஒளி விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ.31

மருதடி முதியோர் சங்க ஒளிவிழா நிகழ்வு இன்று சனிக் கிழமை மாலை 2 மணிக்கு மருதடி ஜே/77 கிராம அலு வலர் அலுவ லகத்தில் இடம் பெற வுள்ளது.

மருதடி முதியோர் சங்கத் தலைவர் கணபதி தலைமை யில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தி னராக அருட்சகோதரி அருள் சீலி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன. எனவே பிரதேச முதியவர் கள் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு மருதடி முதியோர் சங் கத் தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-21)

நாளை
01.01.2017
சுபயிற்றுக்கிழமை
திதி : திருதியை பிற்பகல் 3.16 வரை
நட்சத்திரம்: திருவோணம் பிற்பகல் 3.59 வரை
சுபநேரம் : 9.29 - 10.59
இராகுகாலம் : 4.59 - 6.29

காரைநகர் பிரதேச செயலகம் நடத்திய கலாசார விழாவில் பேரிகை முழக்கம்

காரைநகர், டிசெ.31

தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவியான பேரிகை வாத்தியத்தை மீண்டும் பொது நிகழ்வில் அறிமுகப்படுத்தியிருக்கின்றது காரைநகர் பிரதேச செயலகம். தமிழர்களின் தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்கும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்த வாத்தியம் முழக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் பிரதேச செயலக கலாசார விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுமார் ஐந்து அடி விட்டம் கொண்ட பேரிகை முழங்க விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

பேரிகை என்பது பழந் தமிழர்களின் வாத்தியங்களில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். குறிப்பாகத் தமிழ்நாட்டில் வாழ்ந்த மன்னர்கள் இதனை அதிகமாகப் பயன்படுத்தி இருக்கின்றனர்.

தமிழ் அரசர்களின் போர்ப் பிரகடனம், வெற்றிச் செய்திகள், அரச கட்டளைகள், ஊர்வலங்கள், திருமணச் செய்திகள் போன்றவற்றை மக்களுக்கு அறிவிப்பதற்கு இந்தப் பேரிகை பயன்படுத்தப்பட்டது.

முக்கியமாக, மன்னர்கள் தலைமையில் படைகள் போருக்குச் செல்லும்போது போர்ப் பேரிகை முழங்கப்பட்டது. போர் முடிந்து திரும்பும்போது வெற்றிப் பேரிகை முழங்கப்பட்டது.

அலங்கரிக்கப்பட்ட யானையின் முதுகின் மேல் பெரியபேரிகையைவைத்து முழக்குவார்கள். இந்தப் பேரிகையின் அடுத்த வடிவமாகவே முரசு என்ற வாத்தியம் உருவானது.

இத்தகைய பெருமை மிகுந்த தமிழர்களின் வாத்தியம் இன்று பயன்பாடற்று, வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கும் நிலையில், காரைநகர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை அதனைதற்போது வெளிக்கொண்டு வந்திருக்கின்றது.

காரைநகரைச் சேர்ந்த கலைஞர் சின்னையா சோமசேகரம்பிள்ளை இந்த வாத்தியத்தை வடிவமைத்திருந்தார்.

காரைநகர் - மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய 2016 ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவத்தின் போது வேட்டைத் திருவிழாவன்று இந்த வாத்தியம் முழங்க சுவாமி வேட்டைக்குச் சென்றார்.

பிரதேச செயலகத்தில் பேரிகை முழக்கத்துடன் கலாசார விழா ஆரம்பிக்கப்பட்டதை விருந்தினர்கள் பலரும் வரவேற்றனர். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப் பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் இந்த வாத்தியத்தின் முக்கியத்துவத்தை புகழ்ந்துரைத்தார்.

இந்த வாத்தியத்தை வடிவமைத்த கலைஞருக்கு பிரதேச செயலகம் கலை ஞானச்சுடர் விருது வழங்கிக் கௌரவித்தது. (ஐ)

பாலியல் நோய் பிரிவுக்கு விசேட வைத்திய நிபுணர்

யாழ். போதனா வைத்தியசாலையின் பாலியல் நோய் தடுப்புப் பிரிவுக்கு புதிய வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய நிபுணர் டில்மினி மென்டிஸ் என்பவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பாலியல் நோய் தடுப்புப் பிரிவுக்கு வைத்திய நிபுணர் இன்மையால் நோயாளர்கள் அனுராதபுரம் சென்று தமது மாதாந்த வைத்தியத்தை மேற்கொண்டு வந்தனர்.

அத்துடன் மாதம் தோறும் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அனுராதபுரம் வைத்தியசாலையின் பாலியல் நோய் தடுப்பு பிரிவின் வைத்திய நிபுணர் கரவிட்ட சுழற்சி அடிப்படையில் கடமையாற்றியிருந்தார்.

இந்த நிலையில் சுகாதார அமைச்சால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விசேட வைத்திய நிபுணராக டில்மினி மென்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

முதியோர்களுக்கு பேரீச்சம்பழப் பொதி விநியோகம்

வவுனியா, டிசெ.31

யாழ்ப்பாணம், ஆலடிச் சந்தி, மானிப்பாய் வீதியில் உள்ள புதிய சோனகதெரு ஜே/88 முதியோர் சங்க உறுப்பினர்களுக்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, பேரீச்சம்பழப் பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளன.'

புதிய குடியிருப்பு இளையநிலா சனசமூக நிலையத்தில் வைத்து யாழ்., கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணியகத்தின் தலைவர் மௌலவி சுபியான் பழப் பொதிகளை அன்பளிப்பாக வழங்குவார். (இ)

சந்நிதியான் ஆச்சிரமம்
சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும்
வருடாந்த திருவாசக விழா- 2016

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்

காலம் : 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

ஆசியுரை: நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

திருவாசக பண்ணிசை: செல்விகள் தயாளரூபினி குமாரசாமி
தயாளநீதினி குமாரசாமி (மிக்கவாத்திய சங்கீதம்)

பட்டிமன்றம்:

பொருள் : திருவாசகத்துள் கற்றோர் மனதை கவர்வதில் விஞ்சி நிற்பது தத்துவ அறிவே! பக்தி உணர்வே!

நடுவர் :- செந்தமிழ் சொல்லருவி திரு. ச.லலீசன்
(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

தத்துவ அறிவே!
திரு. சி.ரமணராஜா
(விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)
சைவப்புலவர் கா.கமலநாதன்
(விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசியக் கல்லூரி)

பக்தி உணர்வே!
திரு. இ.சர்வேஸ்வரா
(உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
திரு. வே.சிவராஜா
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

கம்பர்மலை பெரிய தம்பிரான் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு. திருவாசகப் பேருரை முதலியன வழமைபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களது திருவுருவப் படங்களும், திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக ஆச்சிரம மண்டபத்திற்கு திருவாசக பாராயணத்துடன் எடுத்துவரப்படும்.

குறிப்பு: கற்றல் உபகரணங்கள் வழங்கல்

அமரர் தியாகராஜா மகேஸ்வரன் (முன்னாள் இந்து கலாசார அமைச்சர்) அவர்களது ஒன்பதாம் ஆண்டை நினைவுறுத்தும் வண்ணம் 140 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும்.

நினைவுப் பேருரை:
திரு. ஆ.சிவநாதன் (அதிபர், புற்றளை மகா வித்தியாலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

இவ்வண்ணம்
பேரவையினர்.

ஊழல் செய்தோரை வெளிப்படுத்தும் ஆண்டாகப் புதிய ஆண்டு மாற்றப்படும்

ஊழலுக்கு எதிரான அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.31

2017 ஆம் ஆண்டை ஊழல் செய்தவர்களை வெளிப்படுத்தும் ஆண்டாக மாற்றுவதாக ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் தகவல் அறிவதற்காக அவர்கள் நேற்று முன்தினம் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவிற்கு சென்றிருந்தனர்.

இதன்போது அந்த அமைப்பின் இணைப்பாளர் வசந்த சமரசிங்க இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு

நிறைவடைந்துள்ளது. திருடர்களை பிடிக்கவந்த அரசைத் திருடர்களே பிடித்துக் கொண்டுள்ளனர்.

மூவாயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான நிதி மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலையில் ஊழல்காரர்கள் அரசுக்குள் நுழைந்து சட்டத்தை தமக்கு வேண்டியவாறு மாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றனர்.- என்று வசந்த சமரசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

கல்வி அமைச்சர் பதவியை கோருகிறார் பந்துல எம்.பி.

கொழும்பு, டிசெ.31

நல்லாட்சி அரசில் கல்வியமைச்சர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கோரியுள்ளார். இதை அவரே என்னிடம் கூறினார் என்று ஹோமாகம பிரதேசசபையின் முன்னாள் தலைவர் இந்திக கோரளகே தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னரும், ஹோமாகம தொகுதியின் அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னரும் தன்னுடன் நடந்த சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

பந்துல குணவர்தனவுக்குக் கல்வியமைச்சர் பதவி கிடைத்திருந்தால், அவரும் தற்போதைய அரசில் அமைச்சராக இருந்திருப்பார்.

அத்துடன், பந்துல குணவர்தனவுக்கு அமைச்சர் பதவி கிடைக்காத காரணத்தால், அவர் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வருகிறார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

தமிழர், முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில்

தேவையின்றி குழப்பத்தை ஏற்படுத்தினால் எப்படி ஏற்படும் இன நல்லுறவு?

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிழக்கு எதிர்க்கட்சி தலைவர் கேள்வி

அம்பாறை,டிசெ.31

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கப் போகின்றோம் எனக் கூறிக்கொண்டு தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களில் திடீரென சிலைகள் வைக்கப்படுகின்றன . இதனால் அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பரம்பரையாக வாழ்கின்ற தங்களது இடங்கள் பறி போகும் என அச்சப்படுகின்றனர்.

இவ்வாறு மக்கள் மத்தியில் தேவையற்ற குழப் பங்களை ஏற்படுத்து பவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்தால் இனங்களுக்கு இடையில் நல்லுறவை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்?

-இவ்வாறு கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சர் தயாகமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ மன்சூர், கவிந்தன் கோடீஸ்வரன், எதிர்க் கட்சித் தலைவர் எம்.எஸ் உதுமாலெப்பை ஆகியோரின் இணைத்தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த யுத்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முஸ்லிம், தமிழ் மக்களே பாதுகாத்தனர். தற்போதும் அந்த தொல்பொருள் புராதன இடங்கள் பாதுகாப்பாகவே உள்ளன. ஆனால் அண்மைக் காலங்களாக சிலர் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவர்களது இத்தகைய செயற்பாடுகளால் நல்லாட்சி அரசுக்கு களங்கம் ஏற்படுகிறது.

தொல்பொருள் இடங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை, சம்பந்தப்பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தை அரசியல்வாதிகளும், பௌத்த மத குருமாரும் கையில் எடுப்பதை அனுமதிக்க முடியாது. இதுதொடர்பில் சம்பந்தமில்லாதவர்கள் தலையிடும் போதே வீண் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. -என்றார்.

(ச)

கிழக்கில் 299 ஆசிரியர்களுக்கு நியமனம்

கிழக்கு மாகாணத்தில் 299 ஆசிரியர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆயிரத்து 134 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆயிரத்து 502 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்ற போதிலும் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 299 ஆசிரியர்களுக்கே இந்நியமனங்கள் வழங்கப்பட்டன. (ச)

பாசிக்குடா கடலில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

பாசிக்குடா,டிசெ.31

பாசிக்குடாப் பகுதிக்கு சுற்றுலா சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கம்பளைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான எச்.சாந்தஹேவா (வயது-42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தினருடன் சுற்றுலா சென்ற நிலையில், கடலில் நீராடிக்கொண்டிருந்த போதே பிரஸ்தாப நபர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

மட்டக்களப்பில் தொடரும் டெங்கு ஒழிப்பு

நாடு முழுவதும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்தும் சுகாதாரத் துறையினர் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களைஇனங்கண்டு அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் .

இதன் ஒருகட்டமாக மட்டக்களப்பு நகரின் நல்லையா வீதியில் உள்ள வடிகான்கள் மற்றும் குடியிருப்பு வளாகங்களில் புகை விசிறும் நடவடிக்கைகளில் நேற்று வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர்.

பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் நகரை நோக்கி வரும் மக்களின் சுகாதார நலன் கருதியே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மட்டக்களப்பு மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். அமுதபாலன் தெரிவித்தார்.

சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க சுகாதார ஊழியர்களால் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அழிக்கப்பட்டன. இதன்போது சுற்றுப்புறச் சூழல் உள்ளிட்ட குடியிருப்பு வளாகங்கள் துப்புரவு செய்யும் பணிகளும் இடம்பெற்றன(ச)

எழுக தமிழ் பேரணி: கிழக்கில் துண்டுப்பிரசுரம்!

மட்டக்களப்பு,டிசெ.31

மட்டக்களப்பில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கான அழைப்புத் துண்டுப்பிரசுரம் தமிழ் மக்கள் பேரவையால் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் நேற்று வெள்ளிக் கிழமை வழங்கப்பட்டன.

உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான மாபெரும் பேரணியாக 'எழுக தமிழ்' எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதி மட்டுநகரில் நடைபெறவுள்ளது என துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு:-

''உணர்வு பூர்வமாக கலந்து எமது உரிமையை பிரகடனம் செய்வோம். அடிமையாய் வாழ்வதை விட உரிமைக்காக ஒன்றிணைவோம். எமது உரிமையை நாமே உரத்துக் கேட்போம். உரிமையைக் கேட்பது இனவாதமல்ல ,அதை மறுப்பதே இனவாதம். மௌனத்தைக் கலைத்து உணர்வோடு ஒன்றிணைவோம்'' என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ச)

ஏறாவூரில் நேற்று நடந்த புற்றுநோய் விழிப்புணர்வுப் பேரணி

ஏறாவூர்,டிசெ.31

ஏறாவூர் பிரதேசத்தில் புற்றுநோய் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பேரணி ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புற்றுநோய் விஷேட வைத்திய நிபுணர் அகமட் இக்பால் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா, நகர சபையின் செயலாளர் எம்.எச்.எம் ஹமீம் மற்றும் முன்னாள் தவிசாளர் எம்.ஐ.எம் தஸ்லிம்,பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தேசிய புற்று நோய் தடுப்புதிணைக்களத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, மட்டக்களப்புமாவட்டத்தில் ஒரு வருடத்தில் சுமார் ஆயிரம் புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இது தொடர்பில்பொது மக்களுக்கு விழிப்புணர் வூட்டும் நோக்குடன் இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வைத்திய நிபுணர் அஹமட் இக்பால் தெரிவித்தவை வருமாறு:-

பெண்கள் கருப்பைப் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய்களினால் பாதிக்கப்படுகின்றனர். ஆண்கள் மதுபானப் பாவனை, வெற்றிலை மெல்லுதல் மற்றும் புகைப்பிடித்தல் போன்ற காரணங்களினால் புற்று நோயினால் பாதிக்கப்படுகின்றனர். புற்றுநோயை குணப்படுத்த முடியாது என நினைக்கும் பலர், வைத்திய சிகிச்சையை நாடாமல் தாமதித்து சிகிச்சைக்குச் செல்கின்றனர் . இதனால் உயிராபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன. உடனடியாக வைத்திய சிகிச்சையைப் பெறுவதன் மூலம் புற்று நோயைக் குணப்படுத்த முடியும்.-என்றார்

(ச)

ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு இனவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறது!

நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.31

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு இனவாதிகளின் கருத்துகளை பிரசாரம் செய்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த வாரம் தொல் பொருள் பெறுமதிவாய்ந்த வரலாற்றுத் தளங்களை பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபயின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது, பொது பல சேனா அமைப்பின் செயலாளர் முஸ்லிம்களின் போதனைகள் தொடர்பாகவும், இஸ்லாம் தொடர்பாகவும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான நாசகார செயல்களில் ஞானசார தேரர் ஈடுபடுகிறார்.

குறிப்பாக,முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் அவர், தொல்பொருள் வரலாற்றுத் தளங்களை அழிப்பதற்கு இஸ்லாம் போதனை செய்கிறது என்ற அப்பட்டமான இனவாத ரீதியிலான கருத்தை வெளியிட்டிருந்தார்.

இந்த நாட்டில் வாழும் ஒரு சிறுபான்மை இனத்துக்கு எதிராக ஞானசார தேரரினால் தங்கள் முன்னிலையில் முன்வைக்கப்பட்ட இந்த நச்சுக் கருத்து அடங்கிய காணொலியை தங்களது ஜனாதிபதி ஊடகப்பிரிவு சகல ஊடகங்களுக்கும் அனுப்பியுள்ளது.

தாங்கள் இந்த நாட்டில் நல்லிணக்கம் கொண்ட நல்லாட்சியை உருவாக்க செயலாற்றும் இத்தருணத்தில் தங்களது ஊடகப்பிரிவு அதற்கு எதிராகச் செயற்படுகிறது.

நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவிக்கும் இந்த தேரரின் இனவாதக் கருத்தை தங்களது ஊடகப்பிரிவு நல்லாட்சியின் அரசாங்க வளங்களை பயன்படுத்தி அரச அங்கீகாரத்தோடு மக்கள் மயப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தங்களது ஊடகப்பிரிவு வெளியிட்டிருக்கும் இந்த காணொலி இனவாதிகளுக்கு உறுதுணையாய் அமையப் போகிறது என்பது மட்டும் தெளிவாகின்றது.

நல்லாட்சிக்கும் நல்லிணக்கத்துக்கும் பொருத்தமில்லாத இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக தாங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்கமைய, ஜனாதிபதி ஊடகப்பிரிவு மீது விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய அரவு தீர்மானம்!

கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கிறார்

கொழும்பு, டிசெ.31

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் அனைவரையும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய விடுதலை செய்வதென தீர்மானித்துள்ளோம் என கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கிரியங்கள்ளிய நீர்த்தேக்கத்தை மையமாகக் கொண்டு மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வள்ளங்கள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இநத நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அத்துமீறிப் பிரவேசிக்கும் மீனவர்களைக் கைது செய்ய தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் காரணமாக மீனவர்களின் ஊடுருவல் 50 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களது படகுகளையோ உபகரணங்களையோ கையளிக்கப் போவதில்லை.

எமது நாட்டில் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறலே பிரதான சவாலாக உள்ளது.

இதற்கு இறுதித் தீர்வு காண்பதற்காக இராஜதந்திர மட்டத்தில் பேச்சு நடத்திவருகின்றோம். அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராஜதந்திர மட்டத்திலான மற்றொரு பேச்சுவார்த்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

தற்பொழுது 122 இழுவைப் படகுகளுடன் மேலும் 140 நாட்டுப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் யாவும் அரசுடைமையாக்கப் பட்டுள்ளன. அரசுடைமையாக்கப் பட்ட படகுகளையோ உபகரணங்களையோ விடுவிக்கமாட்டோம்.

கைது செய்யப்பட்டுள்ள சகல இந்திய மீனவர்களையும் சட்டமா அதிபரின் ஆலோசனைப் பிரகாரம் விடுதலை செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமருக்கு ஜனாதிபதி நேற்றுக் காலை இறுதி அஞ்சலி

கொழும்பு, டிசெ.31

மறைந்த முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்கவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை இறுதி அஞ்சலி செலுத்தினார்.

முன்னாள் பிரதமர் ரத்ன சிறி விக்ரமநாயக்கவின் உடல் ஹெரணையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஹொரணையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புதிய தலைமுறையின்அரசியல்வாதிகளுக்கு முன்னாள் பிரதமர் ஓர் உதாரணமாவார் என்றார்.

சீனாவுக்கு வழங்கும் காணிகளை அளவிடும் நடவடிக்கைகள் நிறுத்தம்

கொழும்பு, டிசெ.31

சீன முதலீட்டு திட்டத்திற்ககாக வழங்கப்பட இருந்த 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள எதிர்ப்புகள் காரணமாக, இந்த நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு ஆலோசனை கிடைத்துள்ளது என்று காணி அமைச்சின் செயலாளர் ஐ.எச்.கே. மஹானாம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக சீனாவிற்கு வழங்கப்பட உள்ள அம்பாந்தோட்டை பிரதேச காணிகளை அடையாளம் காணும் பணிகள் தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணிகளை பெற்றுக் கொள்ளும்போது மக்கள் வசிக்காத காணிகள் மற்றும் அரசுக்கு சொந்தமான காணிகளுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது.

பொது மக்களின் காணிகள் பெற்றுக்கொள்ளப்படுமாயின் அவர்களுக்கு நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் .

அத்துடன், மனித குடியேற்றங்களை பாதுகாப்பதற்கு முதலிடம் வழங்குவது போன்றே, விலங்குகளின் வாழ்விடங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களையும் பாதுகாப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு; துறைமுக ஊழியர் ஜன.6 இல் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, டிசெ.31

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிர்வரும் 6 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அகில இலங்கை துறைமுக ஊழியர்கள் சங்கம், நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

கறுப்புப்பட்டி அணிந்து கடமைக்கு சமுகமளிக்கவுள்ளதாகவும் வாகனங்களில் கறுப்புக் கொடிகளை ஏற்றியும் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளதாகவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்பனை செய்ய வேண்டாம் எனவும் தமது தொழிலை நிரந்தரமாக்க வேண்டும்எனவலியுறுத்தியும் கடந்த 7 ஆம் திகதி தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் பட்டிவலை மீன்பிடிக்கு முறைப்படி விண்ணப்பிக்க வேண்டும்

மன்னார், டிசெ.31

மன்னார் பகுதியில் பட்டிவலை மீன்பிடியில் ஈடுபடுவோர் மீன்பிடித் திணைக்களத்தில் முறைப்படி விண்ணப்பித்து அதன் சட்ட திட்டங்களுக்கமையவே இந்தத் தொழிலை மேற்கொள்ள முடியும்.

இது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக் கப்பட்டுள்ளது என்று மன்னார் மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.எஸ்.மிராண்டா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் பகுதியில் இரு மீனவ சமூகங்களுக்கிடையே கட்டுவலை மீன்பிடி தொடர்பாக நிலவி வரும் பிரச்சினை, உயர்மட்ட குழுக்களுக் கிடையே இடம்பெற்ற பேச்சுகளைத் தொடர்ந்து ஒரு சுமுக நிலைக்கு வந்துள்ளது.

மன்னார் தென் கடலில் முருகைக் கற்பாறைத் தொடருக்கு அண்மையில் பழமை வாய்ந்த மீன்பிடித் தொழிலான பட்டிவலைத் தொழில் நடவடிக்கையில் மன்னார் பனங்கட்டுகொட்டு மீனவர்கள் ஈடுபடுகின்றனர்.

இதனால் தற்கால தொழில் முறையில் வங்காலை பகுதி மீன வர்கள் இதனால் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த முரண்பாடுகளால் இரு சமூக மீனவர்கள் மத்தியில் நீண்ட காலமாக பிரச்சினைகள் நிலவி வந்தன. இதன் உச்சக் கட்டமாக கடந்த வாரம் இரு சமூகங்களும் வீதியில் இறங்கின.

ஒரு பகுதியினர் இந்தத் தொழிலைத் தடை செய்ய வேண்டாம் எனவும் மற்றைய பகுதியினர் தென் பகுதியில் இந்தத் தொழிலைத் தடை செய்ய வேண்டும் எனவும் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இந்த விடயத்தை அடுத்து உயர் மட்டப் பேச்சுகள் நடை பெற்றன.

மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் பி.எஸ்.மிராண்டா தலைமையில் கடந்த வார இறுதியில் மன்னார் கடற்றொழில் நீரியல்வள திணைக்கள கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கொழும்பிலுள்ள கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், பனங்கட்டு கொட்டு மற்றும் வங்காலை பகுதி பங்கு தந்தையர்கள் அந்தப் பகுதிகளின் மீனவ பிரதிநிதிகள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மன்னார் தென்கடல் பகுதியிலுள்ள அனைத்து கட்டுவலைகளும் அகற்றப்பட வேண்டும். அதன் பின்னர் கட்டு வலை மீன்பிடியில் ஈடுபடுவோர் முறைப்படி கடற்றொழில் திணைக்களத்தில் விண்ணப்பிக்க வேண்டும். நிபந்தனையின் அடிப்படையில் கட்டுவலை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.-என்றார் (ஐ-112)

நிர்வாகிகள் தெரிவு

மன்னார் , டிசெ.31

மன்னார் மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதிகார சபை நிர்வாகத் தெரிவுக்கான கூட்டம் மன்னார் எருக்கலம்பிட்டியில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட சுதந்திரக் கட்சி பிரதான அமைப்பாளர் எம்.ஏ. சீ.மொகமட் நூன் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் மன்னார் மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதிகார சபை நிர்வாகத் தெரிவில் தலைவராக எம்.ஏ.சீ.மொகமட் நூன், செயலாளராக எஸ். சீலன் குலாஸ், பிரதி தலைவராக எஸ்.ஏ. அபுல்தா, பொருளாளராக ஏ.ஐ. பெர்னாண்டோ, பிரதி செயலாளராக எம்.போர்ஜனியா குலாஸ் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.கே.சொய்சா, கே.எஸ்.அமானுல்லா, ரி.யூ.டானியல், எல்.ஏ.ஜவ்சீர், பிறைற்றன், ஏ.அபூபக்கர், எஸ். பிரதீபன், எஸ்.சுபராஜ், எஸ்.பி.எம்.நவாஸ், கண்ணா ஆகியோ ரும் தெரிவு செய்யப்பட்டனர்.(ஐ-112)

மன்னாரில் அலுவலக தோட்ட வயல்விழா

மன்னார்,டிசெ.31

''நஞ்சற்ற உணவு, நஞ்சற்ற நாடு'' எனும் கருப்பொருளில் விவசாய விரிவாக்கல் நிலையம் மற்றும் மாந்தை கமநல அபிவிருத்தி நிலையம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'அலுவலகத் தோட்ட வயல் விழா' நேற்று முன்தினம் மன்னார் மாந்தை கமநல அபிவிருத்தி நிலையத்தில் இடம் பெற்றது.

இதன் போது மாந்தை கமநல அபிவிருத்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அலுவலகத் தோட்டம், வருகை தந்திருந்த விருந்தினர்கள் மற்றும் மக்களால் பார்வையிடப்பட்டது.

இந்த வயல் விழாவுக்குபிரதமவிருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் மற்றும்விருந்தினர்களாக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மன்னார் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஏ.சிறிரங்கன் உட்படகமக் கார அமைப்பின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

வவுனியா - மன்னார் எல்லைக்கல் உடைப்பு



வவுனியா, டிசெ.31

வவுனியா மாவட்டத்தையும், மன்னார் மாவட்டத்தையும் எல்லைப்படுத்தும் அடையாளக் குறிக்கல் திட்டமிட்டு விசமிகளால் சில தினங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டுள்ளது.

வவுனியா - பிரமணாளங்குளம் மடு பிரதான வீதியில் பிரமணாளங்குளத்தில் இருந்து 9.5 கிலோமீற்றர் தூரத்தில் வவுனியா மாவட்டத்தின் பெரியதம்பனை அமைந்துள்ளது.

அதனையடுத்து மன்னார் மாவட்டம் பெரிய பண்டிவிருச்சான் அமைந்துள்ளது.

இவ்விரு பகுதிகளுக்குரிய மாவட்டங்களை வேறுபடுத்திக் காட்டும் அடையாளக் குறிக்கல்லே திட்டமிட்டு விசமிகளால் உடைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, இப் பகுதியில் உள்ள வவுனியா மாவட்டத்துக்குரிய நிலப்பகுதிகள் மன்னார் மாவட்டத்துக்குள் கையகப்படுத்த முயற்சிகள் இடம்பெறுவதாகவும் அதன் ஒரு கட்டமாகவே இது உடைக்கப்பட்டிருக் கலாம் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-100)

புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவிக்கு சைக்கிள்

மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆண்டான்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாடசாலையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அந்த பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் 6 பேருக்கு சைக்கிள்களை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து சைக்கிள்களைக் கொள்வனவு செய்து குறித்த பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கினார்.

இதில் ஒரு சைக்கிளை செல்வி.சிவலோகநாதன் காருணிகாவுக்கு அமைச்சர் மன்னாரில் உள்ள உப அலுவலகத்தில் வைத்து வழங்கிவைத்தார்.

அத்தோடு குறித்த மாணவிக்குத் தேவையான கல்விக்கான உதவிகளை தம்மால் இயன்றவரை செய்து தருவதாகவும், தொடர்ந்து சாதனைகள் பல படைக்கவேண்டும் என்றும் வாழ்த்துத் தெரிவித்தார்.(ஐ)

புலமைப் பரிசில் மாணவர் கௌரவிப்பு

கிளிநொச்சி, டிசெ.31

போருக்குப் பின்னர் பல்வேறு இழப்புக்களைத் தாண்டி கல்வியில் முன்னேற்றம் அடைந்து வரும் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த, 2016 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கிளிநொச்சியில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர்.

உதவும் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்க வேண்டும் என்று உதவும் உறவுகள் அமைப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று புலம்பெயர் உறவான ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு திருமதி செல்வகுமார் நிதர்சினி தம்பதியினர் இரண்டு லட்சம் ரூபா நிதி உதவி செய்திருந்தனர்.

இந்த நிதியுதவியுடன் வறுமையின் மத்தியிலும் கல்வியைத் தொடர்ந்து பரீட்சைக்கு தோற்றிய 66 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் கௌரவிக்கப்பட்டு உதவும் உறவுகள் அமைப்பின் ஊடாகப் பணப் பரிசில்களையும் பெற்றுக்கொண்டனர். இந்தக் கௌரவிப்பு விழாவின் நோக்கம் பின்தங்கிய பிரதேச மாணவர்களை மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்க வைப்பதே என்று உதவும் உறவுகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.(ஐ-21)

பஸ் உரிமையாளருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம்

கொழும்பு, டிசெ.31

அனுமதிப்பத்திரமில்லாத ஒருவரைத் தனியார் பஸ் நடத்துநர் சேவையில் அமர்த்திய குற்றச்சாட்டின் பேரில் கைதான தனியார் பஸ் உரிமையாளருக்கு பதுளை மாவட்ட மேலதிக நீதிவான் சோமசுந்தரம் சத்தியமூர்த்தி, 4 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்தார்.

மேற்படி உரிமையாளர், நபர் ஒருவரை அனுமதிப்பத்திரமின்றி சேவையில் அனுமதித்துள்ளார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது, அந்த பஸ் நடத்துநரிடம் அனுமதிப்பத்திரம் இல்லாதமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, பஸ் உரிமையாளரைக் கைது செய்த பொலிஸார், அவரைக் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே, நீதிவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார். (எ)

சமூக பாதுகாப்பு வலைப்பின்னல்திட்டம்; விரிவுபடுத்த உலக வங்கி கடன் உதவி

கொழும்பு, டிசெ.31

சமூக பாதுகாப்பு வலைப்பின்னல்வேலைத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிவாரண வட்டி அடிப்படையில் இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணங்கியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை அரசுக்கும் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் அரசின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ் சமரதுங்கவும் உலக வங்கியின் சார்பில் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ஐடாஸ் சுவராயி றிட்டிகோவும் கைச்சாத்திட்டனர்.

இந்த நிதி உதவியின் கீழான வேலைத்திட்டம் 2017ஆம் ஆண்டுதொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சமநிலை மேம்படுத்துதல், நாட்டின் சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலை விதிகளுக்கு அமைவாக முன்னெடுத்தல், அதன் செயற்பாடுகளைச் சிறப்பான முறையில் செயற்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக குறைந்த வருமானத்தைக் கொண்ட பொது மக்கள் இதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தில் ஏனைய நிறுவனங்களும் இணைத்துக் கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

சூழலைப் பேணுவதில் அக்கறை காட்டுவார்களா?

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.குடாநாட்டில் தற்போது டெங்கு நோய் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் தகுந்த முறையில் தமது சூழலைப் பேணாததால் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் வீதிகளில் ஆங்காங்கே குப்பைகளை வீசுவதால் மழைக் காலங்களில் அந்தக் குப்பைகளுடன் வெள்ளம் தேங்கி நின்று நுளம்புக் குடம்பிகள் பெருக வாய்ப்பாக அமைந்துள்ளது. பொதுமக்கள் வீதியோரங்களில் கழிவுப்பொருள்களை வீசுவதால் அவற்றைக் கால் நடைகள் இழுத்துச் சென்று பல இடங்களில் போடுகின்றன.

இதனால் சூழலும் அதனைச் சார்ந்த பகுதிகளும் சுகாதாரச் சீர்கேட்டுக்கு உள்ளாகின்றன.

இதேவேளை முறையான கழிவகற்றல் இடம்பெறுவதில்லை என்று மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் தள்ளு வண்டியில் கழிவகற்றும் முறையானது கழிவுப் பொருள்களை வீதி மூலைகளில் குவிக்கப்படுவதாக உள்ளது.

இதனாலும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது.

இது தவிர குடிமனைகள் உள்ள பகுதிகளிலுள்ள ஆள்கள் இல்லாத பற்றைக் காணிகள் துப்புரவாக்கப்படவில்லை.

மேலும் பற்றைக் காணிகளில் உள்ள கிணறுகள் தகுந்த முறையில் சுத்திகரிக்கப்படவில்லை.

இதனால் அந்தக் கிணறுகளில் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் வாய்ப்பும் காணப்படுவதாக மக்கள் மத்தியில் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே தகுந்த முறையில் சுகாதாரத்தைப் பேணுமாறு சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.(எ-20)



குப்பைகளால் சூழ்ந்த றக்கா வீதி - இராசாவின்தோட்ட வீதிச் சந்தி.

கழிவுகளின் இருப்பிடமாக மாறியுள்ள கனகரத்தினம் வீதி.

செல்லர் வீதி, இராச வீதி, புது செம்மணி வீதி சந்திக்கும் இடத்தில் குப்பைகளின் மத்தியில் இடது பக்கத்தில் பாலர் பாடசாலை.

கழிவுகள் கொட்டப்பட்டுள்ள நிலையில் இராசாவின்தோட்ட வீதி.



சின்னக்கிணற்றடி வீதி, நாவலர் வீதி சந்தி ஆகியவற்றில் வீசப்பட்டுள்ள குப்பைகள்.

கனகரத்தினம் வீதி - நாயன்மார்கட்டு கோவில் குளத்திற்கு அருகில் காணப்படும் குப்பைகள்.

ஸ்ரான்லி வீதியில் வீசப்பட்ட குப்பைகளுக்குள் பொலித்தீன் பைகளில் உணவுக் கழிவுகளைத் தேடும் கட்டாக்காலிகள்.

பொன்.வேணு கிருஷ்ணா

"ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 47

ரஷ்ய மற்றும் ஈரானிய சமநிலை அந்தஸ்திலுள்ள அதிகாரிகளான சேர்ஜி லாவ்ரோவ், ஜாவித் ஷாரிவ் உடனான சந்திப்பில் துருக்கிய வெளியுறவு அமைச்சர் மெவ்லூட் காவுசோக்லு, ரஷ்யா, துருக்கி மற்றும் ஈரான் ஆகிய வற்றுக்கிடையிலான உறவு அலெப் போவில் உறுதியான வெற்றியைக் கொண்டு வந்திருந்தது எனக் கூறினார். அது சிரியா வின் ஏனைய பகுதிகளுக்கும் பரவும்எனதான்நம்புவதாகக்குறிப்பிட்டார். (Meeting with his Russian and Iranian counterparts, Sergei Lavrov and Javad Zarif, Turkish Foreign Minister Mevult Cavusoglu said cooperation between Russia, Turkey, and Iran had "brought about definite successes" in Aleppo. He said he hoped "to spread it to other districts of Syria.")

Soldiers involved in the coup attempt surrender on Bosphorus bridge with their hands raised

- ரஷ்ய கூட்டுப் புலன்விசாரணையை தொடக்கிவைத்தபோது, துருக்கிய ஜனாதிபதி ரேஷிப் தயீப் எர்டோகான் ''துருக்கி - ரஷ்ய உறவுகளுக்கு எவரும் தீங்கு விளைவிக்க முடியாது'' என்று குறிப்பிட்டார். During the launch of a Turkish-Russian joint investigation into Karlov's murder, Turkish President Recep Tayyip Erdogan said Ankara and Moscow would "not let anyone harm Turkish-Russian relations."

பெயர் குறிப்பிட விரும்பாத துருக்கிய அதிகாரி ஊடகத்திடம், அமெரிக்காவை அடித்தளமாக கொண்ட புலம்பெயர்ந்து வாழும் மதகுரு பெத்துல்லா கூலன் இயக்கமே கார்லோவ் படுகொலைக்குப் பின்னால் உள்ளதாக மாஸ்கோவும் அங்காராவும் அறியும் என்றார்(Anonymous Turkish officials told the media that Moscow and Ankara both 'know' that the US-based movement of exiled Cleric Fethullah Glen was behind the assassination of Karlov.)

இது அமெரிக்க அரசு செயலர் ஜோன் கெர்ரியிடமிருந்து ஓர் எதிர்ப்பைக் கொண்டுவந்தது. அவர் 20 டிசெம்பர் 2016 இல் நடந்த இந்த சொல்லொணாப் படுகொலைக்குகுறிப்பால்உணர்த்தியோ அல்லது வேறு வகையிலோ அமெரிக்கா தொடர்புள்ளதாக அல்லது ஆதரவு தருவதாக துருக்கியின் வாய்வீச்சு வருவது, கூலன் அமெரிக்காவில் இருப்பதனால் ஆகும் என்று விமர் சித்தார்.(This drew a protest from US Secretary of State John Kerry, who criticized "rhetoric coming out of Turkey with respect to American involvement or support, tacit or otherwise, for this unspeakable assassination yesterday because of the presence of Mr Gülen here in the United States.")

அமெரிக்கநலன்களுக்குநேட்டோ கூட்டு சேவை செய்கிறதா என வெளிப்படையாய்கேள்விஎழுப்பிய டொனால்ட் ட்ரம்ப்

சிரியாவில் நேட்டோ படைகள் பின்னடைவைச் சந்தித்த பின்னர், அமெரிக்க நலன்களுக்கு நேட்டோ கூட்டு சேவை செய்கிறதா என வெளிப் படையாய் கேள்வி எழுப்பிய டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட பின்னர், இந்நிகழ்வுகள் உலக அரசியலில் ஆழமான ஸ்திரமின் மையை மற்றும் உலகப் போர் தோன்றும் ஆ பத்தைச் சுட்டிக்காட்டுகின் றன. (These events point to the deep instability in world politics and the rising danger of world war after the NATO powers' setback in Syria, and the election as US president of Donald Trump, who has openly questioned whether the NATO alliance serves US interests.) ஆறு பத்தாண்டுகளாக துருக்கியானது அமெ ரிக்காவின் நேட்டோ கூட்டாளியாக, கூட்டில் இரண்டாவது பெரிய இராணு வத்தைக் கொண்டதாக இருந்து வந்தி ருக்கின்றது. இருப்பினும், சிரியாவில் ஐந்தாண்டுகள் யுத்தத்தின் பொழுது நேட்டோ சக்திகள் ரஷ்யாவுக்கெதிராக போர்வெறிப் பிரசாரத்தைத் தொடங் கியதற்குப் பின்னர், துருக்கி ஆட்சியானது ரஷ்யாவுடன் என்றுமில்லா வகையில் நெருங்கிச் சென்றுகொண்டுள்ளது.

துருக்கிய அரசாங்கம் பயங்கரவாத இயக்கங்கள் என்று கண்டனம் செய்யும் குர்து தேசியவாதிகளுக்கு அமெரிக்கா அளித்த ஆதரவு தொடர்பாக, வொஷிங்ட னுக்கும் அங்காராவிற்கும் இடையில் மோதல் எழுகையில், 2012 முதற் கொண்டு, அங்காராவின் நேட்டோ பங் காளிகள், துருக்கி அதன் மேற்கத்திய கூட்டாளிகளிடமிருந்து சாத்தியமான வகையில் பிளவுபடப்போவது பற்றி திரும்பத் திரும்ப கவலைகளை வெளிப்படுத்தி இருக்கின்றன.

குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி யின்(PKK) சிரியக்கிளையானசிரிய குர்திஷ் ஜனநாயக ஐக்கிய கட்சி (PYD) மற்றும் அதன் படைப் பிரி வானமக்கள் பாதுகாப்புப் பிரிவுகள் (YPG)

Syrian Democratic Forces

கடந்த ஆண்டு, சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள இஸ்லாமிய அர சின் (ISIS), பிராந்திய வெற்றிகளை அடுத்து, ஒபாமா நிர்வாகம், சிரிய ஜனநாயகசக்திகள்என்றுஅழைக்கப்படும் சபை ஒன்றை நிறுவியது.(Last year, after the territorial gains of the Islamic State in Syria and Iraq (ISIS), the Obama administration founded the so&called Syrian Democratic Forces.) அதில், குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியின் (PKK) சிரியக் கிளையான சிரிய குர்திஷ் ஜனநாயக ஐக்கிய கட்சி (PYD) மற்றும் அதன் படைப்பிரிவான மக்கள் பாதுகாப்புப் பிரிவுகள் (YPG) ஆகியனவற்றை சிரியாவில் அதன் பிரதான கையாட்களாக ஈடுபடுத்தியது. அங்காரா, துருக்கியிலும் பக்கத்து சிரி யாவிலுமுள்ள குர்திஷ் பிரிவினைவா தத்தை தனது இருப்பிற்கான அச்சுறுத் தலாக பயத்துடன் பார்த்தது. (It engaged the Syrian Kurdish Democratic Union Party (PYD), the Syrian branch of the Kurdistan Workers Party (PKK), and its militia, the People's Protection Units (YPG), as its main proxies in Syria. This terrified Ankara, which views Kurdish separatism in Turkey and neighbouring Syria as an existential threat.)

(கேள்வி தொடரும்...)



அமெரிக்க ஆதரவுபடைகளுக்கு எவ்வித உண்மையான மக்கள் ஆதரவும் இல்லை

அலெப்போவிலிருந்து இஸ்லாமிய எதிர்ப்பாளர்களை வெளியேற்றல் மற்றும் மாஸ்கோ, அங்காரா மற்றும் தெஹ்ரானுக்கு இ டையி லான ஒத்து ழைப் பின் முன்னேற்றமானது, வாஷிங்டனுக்கும் அதன் ஐரோப்பிய கூட்டாளிகளுக்கும் ஏற்பட்ட ஒரு பெரிய பின்னடைவினைக் குறிக்கிறது. (The expulsion of the Islamist opposition from Aleppo and developing collaboration between Moscow, Ankara, and Tehran mark a major setback for Washington and its European allies.) கடந்த ஐந்தாண்டுகளாக அமெரிக்க ஏகாதிபத்தியம் சிரிய ஜனாதிபதி பஷார்-அல்-அசாத்தை கவிழ்ப்பதற்கு முயற்சித்தது, இம் மூலோபாயம் பின்னர் சிரியாவில் குர்திஸ் தேசியவாத படைகள் உள்பட்டதற்கு ஆதரவுதர நீடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஊடகங்களில் ஒரு புரட்சியாக விளம்பரப்படுத்தப்பட்ட நிலையில், அது பொறிந்து போனது. ஏனெனில் அமெரிக்க ஆதரவு படைகளுக்கு எவ்வித உண்மையான மக்கள் ஆதரவும் இல்லை. (For five years, US imperialism tried to topple Syrian President Bashar al -Assad by backing Islamist militias, a strategy it later expanded to include backing Kurdish nationalist forces in Syria, as well. While this operation was marketed as a revolution in the US and European media, it collapsed because the US-backed forces lacked any real popular support.)

கார்லோவ் படுகொலை பற்றிய துருக்கிய - ரஷ்ய கூட்டுப் புலன்விசாரணை

துருக்கி அமெரிக்காவின் நேட்டோ கூட்டாளியாக இருந்தாலும், அங்காரா அலெப்போவில் சிரிய ஆட்சி, ரஷ்யா மற்றும் ஈரானுக்கு கிடைத்த வெற்றிக்கு பதில் கொடுத்தது மற்றும் ரஷ்யாவுடன் என்றுமில்லா வகையில் நெருங்கிய உறவுகளை அபிவிருத்தி செய்தது. கார்லோவ் படுகொலை பற்றிய துருக்கிய

Soliders involved in the coup attempt surrender on Bosphorus bridge.

A civilian beats a soldier after troops involved in the coup surrendered on the Bosphorus Bridge

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சீந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர் களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயிரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின் றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.

12

தமிழ்த் தேசிய எழுச்சி

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டக் களம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப் போராட் டத்தின் அரசியல் இராணுவ முக்கி யத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், பல்வேறு காலகட் டங்களில் அது பெற்ற வரலாற்று ரீதியான வளர்ச்சியையும் முன்னேற் றத்தையும் புரிந்து கொள்வது அவசி யம். தமிழரின் விடுதலைப் போராட் டத்தை நசுக்கி அழிக்கும் நோக்கத்தோடு மிகவும் நுட்பமான கட்டமைப்பைக் கொண்ட அரச புலனாய்வுத்துறை இயங்கி வந்தது. அதில் தமிழ் இரக சியக் காவல்துறை அதிகாரிகள் முக்கிய பங்கை வகித்தார்கள். பணத்துக்காகக் காட்டிக் கொடுக்கின்ற குடிமக்கள் சிலரும் உளவாளிகளாகச் செயற்பட்ட னர். இந்தப் புலனாய்வுக் கட்டமைப் பானது தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு, குறிப்பாக புதிதாகத் தோற்றமெடுத்து வளர்ந்து வரும் விடுதலை அமைப்பான புலிகள் இயக்கத்துக்கும் பெரும் அச்சுறுத்த லாக விளங்கியது. சிங்கள அரசின் கிளர்ச்சி முறியடிப்பு இயக்கத்தை முன்னின்று நடத்தி வந்த புலனாய்வுத் துறையினர் நூற்றுக்கணக்கான தீவிர வாத மாணவர்களையும் வேட்டை யாடிச் சிறைப்பிடித்துத் தாங்கொணாச் சித்திரவதைக்கு ஆளாக்கி வந்தனர். இதனால் புதிதாக ஆயுதமேந்திப் போர்க்களத்தில் புகுந்த புலி வீரர் களுக்கு அரச புலனாய்வுப் பிரிவு ஓர் ஆபத்தான சவாலாக அமைந்தது. ஆகவே, இந்தச் சவாலை எதிர்கொண்டு போராட நிர்ப்பந்திக்கப்பட்ட விடு தலைப் புலிகள் புலனாய்வுத்துறையின் கட்டமைப்புக்கு எதிராக எமது ஆயு தப் போரை முடுக்கிவிட்டன. வெற் றிகரமாகப் புலிகள் நிகழ்த்திய தாக் குதல்கள் காரணமாக அரச புலனாய் வுத் துறையின் கட்டமைப்பும் செயற் பாடும் தமிழர் தாயகத்தில் செயலிழந்து சிதைவுற்றது.

விடுதலைப் புலிகளின் ஆரம்பகால கெரில்லாத் தாக்குதல்களின் விளை வாகப் பல காவல்துறைப் புலனாய்வு அதிகாரிகளும், உளவாளிகளும், காட்டிக் கொடுக்கும் துரோகிகளும் கொன்றொழிக்கப்பட்டனர். ஆயினும், ஒரு குறிப்பிட்ட அதிரடித் தாக்குதலே சிங்கள ஆட்சிப்பீடத்தை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது. இச் சம்பவம் 1978 ஏப்ரல் 7 அன்று நிகழ்ந்தது.

வன்னியில், முருங்கனுக்கு அருகில் உள்ள அடந்த காட்டினுள் விடுதலைப் புலிகளின் ஒரு சிறிய பயிற்சிப் பாசறை இருந்தது. இங்கு சில போராளிகள் ஆயுதப் பயிற்சி எடுத்து வந்தனர். இந்தப் பயிற்சிப் பாசறை அமைந்துள்ள தளம் பற்றிய தகவல், ஓர் உளவாளி வாயிலாக புலனாய்வுத் துறையின ருக்குத் தெரியவந்தது. அதனைச் சுற்றி வளைத்து தாக்கியழிக்கும் நோக்குடன் காவல்துறை அதிகாரி பஸ்தியாம் பிள்ளை தலைமையிலான அணி ஒன்று முருங்கன் காட்டினுள் புலிகளின் தளம் நோக்கி நகர்ந்தது. ஒருசில போராளிகளே, அவ்வேளை அம் முகா மில் தரித்திருந்தனர். துப்பாக்கி முனையில் காவல்துறையினரால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்ட பொழுது எமது போராளிகள் பதற்ற மடையாது அமைதியாக இருந்தனர். அவ்வேளை புலிகளின் தாக்குதல் தளபதிகளின் ஒருவரான லெப்.செல் லக்கிளி அம்மான் மிக லாவகமாக காவல்துறை அதிகாரி ஒருவர் மீது பாய்ந்து, அவருடைய சிறிய யந்திரத் துப்பாக்கியைத் பறித்தெடுத்து, கண் மூடித் திறப்பதற்குள் சுற்றிவளைத்த காவல்துறைக் குழுவினரைச் சுட்டு வீழ்த்தினார். இந்தச் சம்பவத்தில் காவல்துறைப் புலனாய்வு அதிகாரி களான பஸ்தியாம்பிள்ளை, பேரம்பலம், பாலசிங்கம் ஆகியோரும், வண்டிச் சாரதியான சிறிவர்த்தனவும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

காவல்துறை அதிகாரி பஸ்தியாம் பிள்ளை சிங்கள ஆட்சியாளரின் கையாள். மிகக் கொடுமையான மனி தர். தமிழ் இளைஞரின் புரட்சி அரசி யலைப் பூண்டோடு அழிக்கச் சபத மெடுத்தவர். ஈவிரக்கமற்ற சித்திர வதைக்கு புகழ்போனவர். தீவிரவாத இளைஞருக்கு அவர் சிம்ம சொப்பனம். புலிகள் இயக்கப் போராளிகளால் இவர் கொன்றழிக்கப்பட்டது தமிழ் இளம் சமூகம் மத்தியில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியது. ஆயுதப் போராட்டத் தின் ஆரம்ப காலத்தில் அரச புலனாய் வுத் துறையினருக்கு விழுந்த பலத்த அடியாக இந் நிகழ்வைக் கொள்ளலாம். இதனால் அரசாங்கம் கலங்கிப் போயி ருந்தது.

பஸ்தியாம்பிள்ளையின் காவல்துறை அணி அழிக்கப்பட்டதற்கும், அதற்கு முன்னராக பல புலனாய்வுக் காவல் துறை அதிகாரிகள், காட்டிக் கொடுத்த துரோகிகள் கொன்று ஒழிக்கப்பட்ட தற்கும், முதற் தடவையாக அதிகார பூர்வமாக உரிமைகோரி, 1978 ஏப்ரல் 25 அன்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை வெளியிட்டது. விடுதலைப் புலிகளின் அறிக்கையை ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. ஆயுதப் போராட்டம் மூல மாக தமிழரின் தேசிய விடுதலையை வென்றெடுக்கும் புரட்சிகரப் பாதை யில் இறங்கியுள்ளதை விடுதலைப் புலிகள் இயக்கம் இந்த உரிமைகோரும் அறிக்கை வெளியிட்டு உலக அரங் கில் தன்னைப் பகிரங்கப்படுத்தியது. உரிமை கோரும் புலிகளின் பட்டிய லில், யாழ்ப்பாண நகர முதல்வரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வட பிராந்திய ஏற்பாட்டாளருமான அல் பிரட் துரையப்பா, பொத்துவில் நாடா ளுமன்ற உறுப்பினர் சி.கனகரெத்தினம் வேறும் பல பிரபல்யம் பெற்ற காவல் துறை, புலனாய்வு அதிகாரிகளும் அடங்கியிருந்தனர்.

தமிழர்களின் ஆயுதம் தரித்த எதிர்ப் பியக்கம் ஒன்று தலைமறைவாக இயங்கி வருவதை அறிந்து அதிர்வ டைந்த சிங்கள அரசு, உடனடியாகவே, 1978 மே மாதத்தில் நாடாளுமன்றச் சட்டமூலமாக புலிகள் இயக்கத்தை தடைசெய்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான இந்தத் தடைச் சட்டம் தமிழரின் ஆயுதக் கிளர்ச்சியை முற்றாக நசுக்கிவிடும் நோக்குடன் அரச ஆயு தப் படைகளுக்கு சர்வ அதிகாரங்களை வழங்கியது. எவரையும் கைது செய் தல், நீதிமன்ற விசாரணையின்றி நீண்டகாலம் சிறை வைத்தல், சித்திர வதை செய்தல், சட்டவிரோதமாக கொலை செய்தல் போன்ற கொடும் செயல்கள் புரிய இச்சட்டம் படையின ருக்கு அதிகாரம் அளித்தது. இக் கொடிய தடைச்சட்டத்தை நிறைவேற் றியதை அடுத்து, பெருமளவிலான படையணிகளை புலி வேட்டையில் இறக்கி தமிழர் தாயகத்தை முழுமை யான இராணுவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது சிங்கள அரசு.

தமிழ்ப் பகுதிகளில் சிங்கள இரா ணுவ அடக்குமுறையை தீவிரப்படுத் தியதை அடுத்து, 1978 செப்ரெம்பர் 7 அன்று, புதிய அரசியல் யாப்பு ஒன்றை ஜெயவர்த்தன நடைமுறைப்படுத்தி னார். இந்தப் புதிய யாப்பு ஜெயவர்த் தனவுக்கு முழுமையான சர்வதிகார அதிகாரங்களை வழங்கியது. அத்துடன் சிங்கள மொழிக்கும் பௌத்த மதத் திற்கும் சிறப்புரிமைகளையும் உயர் தகைமைகளையும் வழங்கியதோடு, தமிழ் மொழியை இரண்டாந்தர நிலைக்கு தரம் இறக்கியது. புதிய யாப்பானது ஜனாதிபதியை 'அரச அதிபராகவும், நிறைவேற்று அதிகார முடைய அரசாங்கத் தலைவராகவும், முப்படைகளதும் பிரதம தளபதியாக வும்' பதவி ஏற்றியது. அமைச்சரவை உறுப்பினர்களை நியமிக்கவும், பதவி நீக்கவும், நாடாளுமன்றத்தைக் கலைக் கவும் அவருக்கு அதிகாரம் பொறுப் பித்தது. சிங்கள அரசின் ஒற்றையாட்சி தன்மையை உறுதிப்படுத்திய புதிய யாப்பிலே திருத்தம் கொண்டு வரு வதானால், அல்லது அதைக் கைவிடு வதானால் நாடாளுமன்றத்தில் மூன் றில் இரண்டு பங்கு அதிகப் பெரும் பான்மை வாக்குகளும், வாக்காளர்க ளின் கருத்துக் கணிப்பு' ஆதரவும் பெற்றாக வேண்டும் என்று விதித்தது. தமிழ்ப் பிரதிநிதிகள் 1978 இன் புதிய யாப்பை அல்லது அதற்கு முந்திய 1972 ஆம் ஆண்டு யாப்பைத் தயா ரிப்பதிலோ பிரகடனப் படுத்துவதிலோ பங்குபற்றவில்லை. புதிய யாப்புக்கு எதிராகத் தமிழ் நாடாளுமன்றக் கட்சி, தமிழ் மக்களை அணி திரட்டி பெரும் எதிர்ப்பைத் தெரிவிக்கத் தவறிவிட் டது. ஆனால், தமிழ் மக்களின் அதி ருப்தியை அனைத்துலக சமுதாயத்தின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்பிய விடுதலைப் புலிகள், புதிய அரசியல் யாப்பு நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட அன்று, இலங்கை பயணி விமானத்துறைக்குச் சொந்த மாக ஒரேயொரு 'அவ்ரோ' விமா னத்தைக் குண்டு வைத்துத் தகர்த் தது.





> தமிழர்களின் ஆயுதம் தரித்த எதிர்ப்பியக்கம் ஒன்று தலைமறை வாக இயங்கி வருவதை அறிந்து அதிர்வடைந்த சிங்கள அரசு, உட னடியாகவே, 1978 மே மாதத்தில் நாடாளுமன்றச் சட்டமூலமாக புலிகள் இயக்கத்தை தடை செய்தது.

(தொடரும்...)

வெலிப்பனையில் விபத்து; இளைஞர்கள் இருவர் சாவு

கொழும்பு, டிசெ.31

வெலிப்பனை - ஹொரவலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

அந்த இளைஞர்கள் பயணித்த மோட்டார் வாகனம் பாதையை விட்டு விலகியமையாலேயே இந்த விபத்து நிகழ்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தின் பின்னர் நாகொட வைத்தியசாலையில் அனுமதித்ததை அடுத்தே இளைஞர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர். ஹொரவலை மற்றும் எலமுல்ல பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 25 வயதுடைய இளைஞர்களே இந்த விபத்தில் பலியானவர்கள் ஆவர்.

விபத்துத் தொடர்பில் தாம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குவோருக்கு நிவாரணம்

கொழும்பு, டிசெ.31

பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வோருக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப் படவுள்ளது.

இதற்காக நுண்கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் ஷரித்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் உரையாற்றினார். இதன்போதே அவர் இதனைக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''நுண்கடன் சட்டம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. முன்னைய அரசாங்கம் பெருமளவு வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்திருந்தது.''-என்றார். (எ)

அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி; விவசாயிகளுக்கு பெரியளவில் பாதிப்பு

கொழும்பு, டிசெ.31

அத்தியாவசியப் பொருள்களை அரசு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதால் தாம் பெருமளவில் பாதிப்புக்குள்ளாவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு அரசு கவனம் செலுத்த வில்லை. மாறாக வெளிநாட்டுப் பயிர்ச்செய்கைக்கே முக்கியத்துவம் அளிக்கின்றது.

நாட்டில் தற்போது உள்நாட்டுப் பயிர்களின் தேவை அதிகமாக உள்ளது.

ஆனால் எம்மால் அதற்கேற்ற வகையில் பயிர்களை உற்பத்தி செய்ய முடிவதில்லை.

இதற்கு அரசு எமக்கு உரிய வகையிலான பயிர்ச்செய்கைக்கான ஏற்பாடுகளை செய்யாமையே காரணமாகும்.

இதேவேளை அதிகரிக்கும் கேள்விக்கு ஏற்ப விநியோகிப்பதற்கு பல்வேறு காரணங்களால் முடியாதுள்ளதாக அரசு சுட்டிக்காட்டுகின்றது.

குறிப்பாக மிளகாய், உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், பயறு மற்றும் சோளம் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் உற்பத்திகள் கடந்த இரண்டு வருடங்களில் ஒப்பிடுகையில் 25 வீதத்தால் குறைவடைந்துள்ளன.

கேள்விக்கேற்ப உள்நாட்டு உற்பத்திகள் கிடைக்காமையால் பெரியளவு அந்நியச் செலாவணி ஊடாக பொருள்களை அரசுக்கு இறக்குமதி செய்ய நேரிட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 5 பொருள்களின் இறக்குமதிக்கு மாத்திரம் 7 ஆயிரத்து 246 மில்லியன் ரூபா செலவிட வேண்டியுள்ளதாக விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை உரமானியம் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை ஊடாக உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விவசாய சங்கங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு அரசு உதவிகளை வழங்க வேண்டும். மேலும் உரமானியத்தை அதிகரித்து விவசாயத்தைப் பாதுகாப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.(எ)

தினசரி ராசி பலன் 31.12.2016

சுபநேரம் : காலை : 7.45 - 8.45
மாலை : 4.45 - 5.45
ராகு காலம் : 9.00 - 10.30
குளிகன் : 6.00 - 7.30
எமகண்டம் : 1.30 - 3.00

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

மேல் நோக்கு நாள்

மேஷம்: மகிழ்ச்சி - மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

ரிஷபம்: ஆர்வம் - செய்யும் செயல்களில் அதிக ஈடுபாடு ஏற்பட்டு வாழ்வில் முன்னேற்றம் கிடைக்கும்.

மிதுனம்: நன்மை - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் வாக்குவாதத்தைக் குறைத்தால் நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல தரும்.
சந்திராஷ்டமம் : திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்.

கடகம்: பாசம் - இனிமையானவர்கள் அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும்.

சிம்மம்: முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களிலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

கன்னி: சுகம் - இன்று மனதில் மகிழ்ச்சி நிறையும் நன்னாள்.

துலாம்: வரவு - இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் கிடைக்கும்.

விருச்சிகம்: பெருமை - இன்று திடீர் புகழாரம் உங்கள் வாசல் நாடி வரும் நாள்.

தனுசு: பொறுமை - நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை நாடுவீர்கள்.

மகரம்: நிம்மதி - வளமான வாழ்வும் அமைதியும் வாசல் கதவை தட்டும் நிம்மதி தரும் நாள்.

கும்பம்: பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் வரும்.

மீனம்: இன்பம் - நினைத்த காரியங்கள் நல்ல முறையில் நிறைவேறி சிறப்புக்கள் பெறும் நன்னாள்.

2017 ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்

'எண்கள் எதையும் செய்யும்'
2017ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள் அன்பான வாசகர்களே, பிறந்த திகதி தெரியாதவர்கள் தங்களது ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

பொதுப்பலன்

இந்த ஆண்டு தன்பலம் தனக்கே தெரியும் என்பதுபோல ஒவ்வொருவரும் மிக உத்வேகமாக தனது பணிகளை கவனிக்க துவங்கவிருப்பதால் உற்பத்தித்துறை மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் பெறும். அரசாங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக வந்து குவியும் மக்களுக்கு. கால்நடைகள் அதிகரிக்கும். நில விற்பனை பெருகும். சாதாரண பதவியில் இருப்போர் தமது விடாமுயற்சியால் நம்பமுடியாத ஏற்றங்களை அடைவர். கண் சம்பந்தமான நோய்கள் பலருக்கு வரலாம். இதற்கான முன்னெச்சரிக்கை அவசியம். அதிகளவில் துன் புறுத்தி வந்த நோய்கள் அகன்றுவிடும். ஆசாரமாக நடந்து ஆண்டவன் பற்றுடையவர்கள் அதிக அளவில் ஆனந்தமான வாழ்வை பெறுவர். பொதுப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்ட பலர் அரசாங்க திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் அதிகமான உதவிகரமாக இருப்பதால் மக்கள் கூடுதல் பலன்களை பெற்று மகிழ்வர்.

குறிப்பாக உலகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெறும். பொருளாதார ஏற்றத்தை அள்ளிக் குவிக்கும். நாட்டின் தலைவர்கள் உலக மத்தியில் போற்றப்படும் அளவுக்கு அரசின் திட்டங்களை வகுத்து செயற்படுவர். இந்த ஆண்டின் துவக்கம் 1ஆம் எண்ணிலும், ஞாயிறு அன்று துவங்குவதாலும், 1.1.2017 இன் கூட்டு எண் 3-ஆக வருவதாலும், எல்லா இடங்களிலும் நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு மிகுந்து காணப்படுவதால் தேசத்தில் விரோதத்தை ஏற்படுத்துவோர் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். நாட்டின் பெயர் எண் 1ஆக வரும் நாடுகளும், 3ஆம் எண்ணைக் கொண்ட நாடுகளும் உலக மத்தியில் பெரும் செல்வாக்கை நிலை நாட்டும்.

மேலும் இந்தியாவின் பொருளாதார ஏற்றம் வானளவில் உயரும். இரும்பு, வெற்றோலிய உற்பத்தி, புடைவைத் தொழில், மருந்து, மருத்துவ நிலையங்கள், கல்வி, அரசாட்சி கொடி கட்டிப் பறக்கும். மொத்தத்தில் நல்லாட்சியாளர்களின் நிலை நினைத்துப் பார்த்திராத அளவுக்கு உயர்ந்திடும்.

எண் 5

- 5, 14, 23 திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயரின் முதல் எழுத்தாக E, H, N, X-ஐ பெற்றவர்களுக்கும், பெயர் எண்ணாக 5-ஐ பெற்றவர்களுக்கும் வரும் வருடம் வெகுவான பலன்களை அள்ளித்தரும். எதிலும் முதன்மையாக செயல்படுவீர்கள்.
- தங்களின் அயராத உழைப்பினால் குறையாத செல்வம் குபு குபுவென வந்து சேரும் நேரம் இது. கடன் தொல்லை இனி இல்லை.
- சொந்த பந்தங்கள் சுபகாரியங்களை மகிழ்வுடன் நடத்த மனமாற உதவிடுவர். மகிழ்ச்சியும் நிலைத்திடும்.
- உடல் நலம்பெற்று உற்சாகமுடன் செயல்படும். துணைவியார் குழந்தைகளும் குதூகலத்துடன் செயல்படுவர்.
- ஏற்றுமதியாளர்களும், இரும்பு உற்பத்தியாளர்களும் கட்டுமான நிறுவனங்களும் உயர்விற்குமேல் உயர்வைப் பெறுவர்.
- வியாபாரிகள் திட்டமிடுதல் மூலம் அதிக ஆதாயத்திற்கு வழி பெறுவதுடன், புதிய வாகனம், புதிய வீடு வாங்கி மகிழ்வர்.
- என்னவெல்லாம் வேண்டுமென எதிர்பார்த்தார்களோ அவை எல்லாம் கிடைப்பதுடன் கௌரவமும் கிடைக்கப்பெறுவர் பணியாளர்கள்.
- தலைமையிடம் நற்பெயர் உண்டு. விரும்பிய பதவியும் உண்டு. ஆதாயத்திற்கு அரசாங்க ஒப்பந்தங்களும் உண்டு அரசியல்வாதிகளுக்கு.
- உள்நாடு, வெளிநாடு என வெகு சுறுசுறுப்பாக இயங்கி வருமானத்தை அள்ளிக் குவிப்பர் கலைத்துறையினர்.
- தண்ணீர் வசதி பெறுவர். உழவு கருவிகள் வாங்குவர். வங்கிகள் கடன் தொகைகளை வாரி வழங்கும் விவசாயிகளுக்கு.
- எல்லாவழிகளிலும்நீங்கள்போட்டதிட்டம்தான் வீட்டில் விதிகளாக அறிவிக்கப்படும் பெண்களே. இதனால் உங்கள் கையே ஓங்கிடும்.
- அன்றாட பணிகளை திட்டமிட்டு செயலுக்கு கொண்டுவருவதால் வெற்றி என்ற சொல்லுக்கு மாறுதலே இல்லை மாணவர்களுக்கு.

கலாநிதி ஜே.என்.எஸ்.செல்வன் Ph.D.,
எண் கணித ஆலோசகர்
வாஸ்து நிபுணர், நிலத்தடி நீர் நிபுணர்.
Email : jnsnumerro@yahoo.co.in

அரசு கொடுக்கும் வளங்களை சரியாகப் பயன்படுத்துங்கள்

மீசாலைக்கு வருகை தந்த அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு

தென்மராட்சி, டிசெ.31

அரசு மக்களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு வழங்கும் வளங்களை மக்கள் உரிய வகையில் பயன்படுத்த வேண்டும்.

-இவ்வாறு வடக்கு மாகாண அமைச்சர் அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மீசாலை கிழக்குக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அண்மையில் விஜயம் செய்தார்.

கடந்த ஆண்டு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மீசாலை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட அரைக்கும் ஆலை தற்போது பாவனையின்றி உள்ளது என்று மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்துக்குறித்த



விடயம்தொடர்பாக அமைச்சர் விரைந்து பரிசீலனை செய்யும் நோக்கோடு மீசாலைக்கு நேரடி விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கேசவன் சயந்தனும் சென்றிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அந்தப் பகுதிக்கான கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ''அந்த அரைக்கும் ஆலை அரச நடைமுறைகளுக்கு அமைவாகப் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினருக்கு மாதம் 8 ஆயிரம் ரூபா வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான வாடகையை மீசாலை கிராம அபிவிருத்தி சங்கம் மாதாந்தம் பெறுகிறது.'' என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் குறித்த பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவருடன் கலந்துரையாடிய வேளை, ''உள்ளீடுகள் கொள்வனவு செய்வதற்குத் தமக்கு போதுமான நிதி மூலங்கள் இல்லை. நாம் அதனைப் பயன்படுத்த முடியாதுள்ளது. நாம் அதற்கான மாதாந்த வாடகையை தவறாமல் செலுத்திவருகிறோம். எதிர்வரும் தை மாதம் முதல் அரைக்கும் ஆலையை இயக்கவுள்ளோம்.'' என்று தெரிவித்திருந்தனர்.

இறுதியில் இதுதொடர்பாக அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், மக்கள் அரசால் கொடுக்கப்படும் வளங்களை உரியமுறையில் பயன்படுத்த வேண்டும். அதனூடாக உயர்ந்த பயனை அடையமுடியும். அந்த வகையில் சகல நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தி எதிர்வரும் ஆண்டில் இந்த அரைக்கும் ஆலையை பயன்படுத்தி உயர் இலாபம் ஈட்டவகை செய்யுங்கள் என்று சங்கத்தினரிடமும் அதனை மேற்பார்வை செய்யுமாறு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடமும் பணிப்புரை வழங்கினார். (ஐ)

10 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

இலங்கையில் பத்து மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகமாக உள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது சுகாதார அமைச்சின் பணிப்பாளர் பாலித்த மஹிபால இதனை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

காலி, கம்பஹா, கொழும்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் பரவுவதற்கு அதிகவாய்ப்புக்கள் உள்ளன.

இந்த மாதத்தில் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 4 ஆயிரத்து 242 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

12 ஆயிரத்து 238 குடியிருப்புக்கள் மற்றும் இடங்களில் டெங்குநோய் தொற்று தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனிடையே, எதிர்வரும் இரண்டு தினங்களும் நாடளாவியரீதியாக டெங்கு நோய் தொற்று தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

டெங்குநோய் தொற்று காரணமாக கொழும்பு உள்ளிட்ட 10 மாவட்டங்களை சேர்ந்த 48 ஆயிரத்து 682 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு தொற்றால் இந்த வருடத்தில் மாத்திரம் 77 மரணங்கள் பதிவாகியுள்ளன.-என்றார்.

(ஐ)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள

மயானங்களில் எரிகொட்டகைகள் அமைக்க ரூ.40 லட்சம் ஒதுக்கீடு

மழை காலங்களிலும் சடலங்களைத் தகனம் செய்வதற்கு வசதியாகப் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள மயானங்களில் எரிகொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கு 2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இருபதுக்கும் மேற்பட்ட இந்து மயானங்களிருக்கின்றன. பரந்துபட்ட இப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயானங்களில் இதுவரை காலமும் எரிகொட்டகைகள் அமைக்கப்படாமையால் மழை காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

மயானங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பதும் இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் பிரதேச சபை கவனத்துக்குத் தெரியப்படுத்தியமையை அடுத்து முன்னுரிமை அடிப்படையில் தலா 4 லட்சம் ரூபா செலவில் பத்து மயானங்களில், எரிகொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன. விசேடமாக அடுத்த வரவு - செலவுத்திட்டத்தில் மயானங்கள் அபிவிருத்தி செய்வதற்காக 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-59)

சாயி நிலையத்தில் புத்தாண்டு பஜனை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியிலுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு புத்தாண்டு விசேட பஜனை இடம் பெறவுள்ளது.

சாயி நிலையத்தலைவரின் புத்தாண்டு வாழ்த்துரையுடன் காலை 8 மணிக்கு நிகழ்வுகள் நிறைவடையும். மாலை 4.30 மணிக்கு வழமையான ஞாயிறு பஜனை இடம்பெறும். (இ)

மறுபிரசுரம்

தமிழ்ச் சங்கத்தில் நாளை நாவலர் விழா

கொழும்பு,டிசெ.31

கொழும்பு பம்பலப்பிட்டியில் இயங்கிவரும் நாவலர் நற்பணி மன்றம் ஏற்பாடு செய்துநடத்தும் நாவலர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறவிருக்கிறது.

பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் பிரதம விருந்தினராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன்விசேடவிருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

இந்த நிகழ்வில் 'தமிழ்ப் பணியில் தலைநின்ற நாவலர்' என்ற பொருளில் பேராசிரியர் சி.தில்லைநாதன் தலைமையில் இடம் பெறும் கருத்தரங்கத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி க.இரகுபரன், கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோர் பங்குகொண்டு கருத்துரைகளை வழங்குவார்கள்.

நாவலரின் பாலர் பாடம் முதலாம் புத்தகம் முதல்நான்காம் புத்தகம் வரையிலான நான்கு நூல்களும், நாவலர் நூற்றாண்டு மலர், நாவலர் நினைவுமலர் உள்ளிட்ட நாவலரைப்பற்றிஏனையஅறிஞர்கள் எழுதிய நூல்களும் இந்த நிகழ்வில் வெளியிடப்படவிருக்கின்றன. (இ)

குரும்பசிட்டி ஆலய மகோற்சவம்

குரும்பசிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மஹோற்சவம் பத்து தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(இ)

கட்டுவன் கரண்டக்குளம் ஐயப்பன் கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. மங்கல இசை முழங்க, பக்தர்கள் புடை சூழ ஐயப்பன் தேரில் வலம் வருகிறார்.

நிலக்கரிச் சுரங்கம் இடிந்ததில் 7 பேர் பலி; 20 பேர் மாயம்

ராஞ்சி, டிசெ.31

ஜார்க்கண்டில் நிலக்கரிச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்தனர். 20 பேரைக் காணவில்லை. மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள லால்மாதியா நிலக்கரிச் சுரங்கம் நேற்று முன்தினம் சரிந்து விழுந்தது. அந்த இடிபாடுகளுக்குள் 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 20 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து விபத்து ஏற்பட்ட பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் விபத்து நேரிட்ட பகுதிக்கு விரைந்துள்ளனர். இரவு முழுவதும் பனிமூட்டம் காரணமாக மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டது. நேற்றுக் காலை முதல் மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரையில் 7 பேர் சடலமாக மீட்கப்பட்டு உள்ளனர்.

இதனால் மற்றவர்கள் கதி என்ன என்பதில் கேள்விக்குறி எழுந்துள்ளது. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (எ)

ரூபா தாள்கள் வாபஸ் காங்.தலைமை விரக்தி

பிரதமர் மோடி ஆங்கில நாளிதழுக்குப் பேட்டி



டில்லி, டிசெ.31

உயர் மதிப்புடைய ரூபா தாள்கள் மீளப் பெற்றமை காரணமாக காங்கிரஸ் தலைமை விரக்தி அடைந்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அளித்த பேட்டியில் கூறியுள்ளவை வருமாறு:-

''ரூபா தாள்கள் மீளப் பெற்ற நடவடிக்கையால் நேர்மையானவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

கறுப்புப் பணத்தை சில நாள்கள் வரையே பதுக்கி வைத்திருக்க முடியும். காங்கிரஸ் உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகள் ரூபா தாள்கள் விவகாரத்தை தேர்தல் ஆதாயத்துக்காக எதிர்த்து வருகின்றன.

ரூபா தாள்கள் மீளப் பெற்ற முடிவு எடுக்கப்பட்டதில் எந்தவொரு அரசியலும் இல்லை. எமது தேசத்தின் பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றைத் தூய்மைப் படுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இத்தகைய முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவை தவறான நிர்வாகம், திட்டமிடப்பட்ட கொள்ளை என்று முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் விமர்சித்ததைக் கவனத்தில் எடுத்துக் கொண்டால், அவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற 2-ஜி அலைக்கற்றை ஊழல், கொமன்வெல்த் விளையாட்டு ஊழல் போன்ற வற்றை மனதில் வைத்து அவர் அப்படி கூறியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரின் இரு அவைகளிலும் உரையாற்றுவதற்கு மிகுந்த ஆர்வமுடன் இருந்தேன். ஆனால், ரூபா தாள்கள் விவகாரத்தை முன்னிறுத்தி விவாதிக்க விடாமல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற அலுவல்களை முடக்கிவிட்டன. மத்திய அரசின் சில நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ள வேண்டிய எதிர்க்கட்சிகள், வெளிப்படையாக நேர்மையற்றவர்களுக்குப் பாதுகாப்பு அரணாகச் செயற்பட்டமை இதுதான் முதல்முறை.'' என்றார். (எ)

புனேயில் பேக்கரியில் தீ: 6 பேர் மூச்சுத் திணறிச் சாவு

புனே, டிசெ.31

புனேயில் உள்ள பேக்கரியில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 6 தொழிலாளர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்தனர்.

மராட்டிய மாநிலம் புனே நகரின் கொண்டவா என்ற பகுதியில் பேக்ஸ் இன் ஜேக்ஸ் என்ற பேக்கரி உள்ளது. அந்த பேக்கரியில் நேற்று அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

இதன்போது கடைக்குள் தூங்கிக் கொண்டிருந்த 6 பேர் புகை மூட்டத்தில் சிக்கினார்கள். அவர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்தனர். பொலிஸார் நடத்திய விசாரணையில் மின் கசிவு காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டது என தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே தீ விபத்து ஏற்பட்ட பேக்கரியின் கதவு வெளிப்பக்கமாகப் பூட்டப்பட்டிருந்ததால் தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் மூச்சுத்திணறி உயிரிழக்க நேர்ந்ததாகக் கூறப்படுகிறது. இதுபற்றியும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

டில்லி துணை முதல்வர் அலுவலகத்தில் திருட்டு

டில்லி, டிசெ.31

டில்லி துணை முதல்வர் மணிஷ் சிசோடியாவின் அலுவலகம் நேற்று முன்தினம் திருட்டுக் கும்பலால் சூறையாடப்பட்டது. அத்துடன் அங்கிருந்த முக்கிய ஆவணங்களையும் திருடிச் சென்றுள்ளது.

டில்லி துணை முதல்வரின் அலுவலகம் பத்பர்கஞ்ச் தொகுதியில் உள்ள வினோத் நகரில் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் இரவு நுழைந்த திருடர்கள் அலுவலகத்தை அடித்து நொறுக்கிச் சூறையாடினர். இதேவேளை திருடிய தடயத்தை மறைப்பதற்காக சி.சி.ரி.வி கமராக்களை திருப்பி வைத்துள்ளனர்.

நேற்றுக் காலை பணிக்கு வந்த ஊழியர் ஒருவர், அலுவலகம் அலங்கோலமாகக் கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் அளித்தார். இதையடுத்து மோப்ப நாயுடன் சென்ற பொலிஸார், விசாரணை நடத்தினர். கைரேகை நிபுணர்களும் சென்று தடயங்களைச் சேகரித்தனர். (எ)

தேர்தலை எதிர்நோக்கும்போதுதான் சசிகலாவால் அ.தி.மு.கவுக்கு சிக்கல்!

அரசியல் விமர்சகர் ஞானி கருத்து



சென்னை, டிசெ.31

அ.தி.மு.க. பொதுச் செயலராக சசிகலா நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், தேர்தலைச் சந்திக்கும்போதுதான் அந்தக் கட்சி பிரச்சினையைச் சந்திக்க நேரிடும் என்று அரசியல் விமர்சகர் ஞானி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியின்போது தெரிவித்தாவது:-

''பொதுச் செயலாளர் பதவிக்கு சசிகலா தகுதியானவரா என்பதை அந்தக் கட்சியினர்தான் முடிவு செய்ய வேண்டும்.

அ.தி.மு.கவைப் பொறுத்தவரை, ஜெயலலிதாவைத் தவிர அந்தக் கட்சிக்குத் தலைவர் என்று வேறு யாரும் இல்லை. அந்தச் சூழ் நிலையில், தேர்தலைச் சந்திக்கும் போது, ஜெயலலிதாவைப் போல மக்கள் செல்வாக்குள்ள, மக்களுக்குத் தெரிந்த முகம் இல்லை என்பது அவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கும். தேர்தலைச் சந்திக்கும் வரை பிரச்சினை இருக்காது.

ஜெயலலிதா உயிரோடு இருந்தபோதே, சசிகலாதான் நடைமுறையில் கட்சியையும் ஆட்சியையும் நடத்திக் கொண்டிருந்தார் என்று பல்வேறு பத்திரிகைச் செய்திகள் வந்திருக்கின்றன. ஏற்கனவே, திரைக்குப்பின்னால் இருந்து கட்சியையும் ஆட்சியையும் இயக்கியவருக்குத் தொடர்ந்து அதைப் பகிரங்கமாகச் செய்வதில் பெரிய சிக்கல் இருக்க முடியாது.

முதல்மைச்சர் ஆவாரா?

இதேவேளை, சசிகலா முதலமைச்சராவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்விக்குப் பதிலளித்த ஞானி, 'பொதுச் செயலாளராவதற்கான வாய்ப்பு இருக்கும் போது, அடுத்த முதலமைச்சராவதற்கான வாய்ப்பும் இருக்கிறது என்றுதானே அர்த்தம்,' என்றார்.

பொதுமக்களைப் பொறுத்தவரை, அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றுவந்தவிதம் அவர்களுக்குத் தெரியும். ஜெயலலிதா இருந்தபோது, எப்படித் திரைக்குப் பின்னால் இருந்து

இயக்கிக் கொண்டிருந்தார், கட்சியும் ஆட்சியும் எப்படி செயற்பட்டுக் கொண்டிருந்தன என்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதிலிருந்து வேறுபட்டதாக ஒன்று இருந்துவிடக் கூடிய வாய்ப்பில்லை.

பா.ஜ.கவுக்கு என்ன பலன்?

2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அப்போது அவர்களுக்கு அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவை. அதற்கு அவர்கள் கூட்டணிக்கு அ.தி.மு.கவை விரும்பலாம். எனவே, அதற்கேற்ப, அ.தி.மு.கவை நோக்கி அவர்கள் காய் நகர்த்தலாம் என எதிர்பார்க்கலாம்.''என்று தெரிவித்தார். (எ)



சீனா அமைத்த உலகின் மிகவும் உயரமான பெய்ப்பாங்ஜியாங் பாலத்தை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் மக்கள் பாவனைக்காகத் திறந்துள்ளது.

தென்மேற்குச் சீனாவை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம் தரையிலிருந்து சுமார் ஆயிரத்து 850 அடி உயரத்திலும், 4 ஆயிரத்து 400 அடி நீளத்திலும் அமைந்துள்ளது. 200 மாடிக் கட்டடங்களின் உயரத்துக்கு இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

ஊழல்செய்த அதிகாரிகளை ஹெலியிலிருந்து வீசுவேன்

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி எச்சரிக்கை

மணிலா, டிசெ.31

ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகளை ஹெலியில் இருந்து வீசி எறிவேன் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டியூடெர்டோ எச்சரித்துள்ளார்.

புயலால் பாதிக்கப்பட்டுள்ள கமரைன்ஸ்ஸர் மாகாணத்தைப் பார்வையிட்ட பின்னர் ரொட்ரிகோ செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகளை ஹெலியில் அழைத்துச் சென்று வானில் இருந்து வீசி விடுவேன். இதற்கு முன்பு தான் மேயராக பதவி வகித்தபோது பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட நபரை ஹெலியில் இருந்து வீசி எறிந்தேன்.

பிலிப்பைன்ஸில் போதை மருந்து முற்றிலும் ஒழிக்கப்படும் வரை இந்தக் கடுமையான நடவடிக்கை தொடரும்.''- என்றார். இதேவேளை போதை மருந்து பயன்படுத்து வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை ரொட்ரிகோ எடுத்து வருகிறார். இவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற மே மாதத்தில் இருந்து தற்போது வரையில் போதை மருந்து பயன்படுத்துவோர் மற்றும் பரப்புவோர் என ஆறாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

அமெரிக்காவுக்கு பதிலடி எச்சரிக்கிறது ரஷ்யா

மொஸ்கோ, டிசெ.31

அமெரிக்காவின் நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

மேலும், ரஷ்யாவின் பதில் நடவடிக்கை அமெரிக்காவை குறிப்பிடத்தக்க அளவுக்கு அசௌகரியப்படுத்துவதாகக் காணப்படும் என்று புடினின் நண்பர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்யாவில் அமெரிக்க இராஜதந்திரிகளின் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் கல்வி கற்கும் பாடசாலைகளை ரஷ்யா மூடலாம் என்று சி.என்.என். செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

மேலும், ரஷ்யா அதேயளவு இராஜதந்திரிகளை வெளியேற்றலாம் என்ற எதிர்வுகூறல்களும் வெளியாகியுள்ளன. (எ)

சிரியாவில் போர்நிறுத்தம்

டமஸ்கஸ், டிசெ.31

சிரியாவில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளது.

சிரிய அரசுக்கும் போராளிகள் தரப்புக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது இதற்கான உடன்பாடு எட்டப்பட்டதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் துருக்கி வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஆகியோர் உறுதி செய்துள்ளனர்.

ஆயுததாரிகள் தரப்புக்கும் சிரிய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற இந்த உடன்படிக்கையில் பல ஆயுதக் குழுக்கள் கைச்சாத்திட்டுள்ளன.

எனினும் இந்த உடன்படிக்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் அல் நுஸ்ரா ஆகிய அமைப்புக்கள் கைச்சாத்திடவில்லை என்று சிரியாவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

ரஷ்யத் தூதரகத்தின் 35 அதிகாரிகளை வெளியேற உத்தரவிட்டது அமெரிக்கா

72 மணி நேர காலக்கெடுவுடன்

வொஷிங்டன், டிசெ.31

அமெரிக்காவிலுள்ள ரஷ்யத் தூதரக அதிகாரிகள் 35 பேரை பதவி நீக்கம் செய்ததோடு, 72 மணி நேரத்தில் அவர்கள் அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் மக்கள் வாக்குகளைப் பெருவாரியாகப் பெற்றாலும், குடியரசுக் கட்சி வேட்பாளர் ரொனால்ட் ட்ரம்ப் தேர்தல் சபை வாக்குகளை அதிகம் பெற்றதால், வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ரொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவதற்கு ஆதரவாக ரஷ்ய அதிகாரிகள் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந்தத் தேர்தல் முறையில் ரஷ்யாவைச் சேர்ந்த ஊடுருவல்காரர்கள் நுழைந்து மோசடி செய்துவிட்டனர் என்று கிரீன் கட்சி வேட்பாளர் ஜில் ஸ்டீன் குற்றம் சாட்டி இருந்தார்.

தற்போது அமெரிக்காவின் உளவு இரகசியங்களை வெளியிட்ட எட்வர்ட் ஸ்னோடன், இதே குற்றச்சாட்டைக் கூறி அந்தத் தகவலின் உண்மைத்தன்மையை உறுதி செய்துள்ளார்.

மட்டுமின்றி ரொனால்ட்ட்ரம்ப் வெற்றி பெறும் வகையில் மின்னணு வாக்கு இயந்திரத்தில் மோசடி இடம்பெற்றமைக்கான ஆதாரம் தங்களிடம் உள்ளதாகவும் ஸ்னோடன் தெரிவித்தார். இதுகுறித்து விரிவான விசாரணைகளை மேற் கொள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையில், ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடு செய்ததாக எழுந்த குற்றச்சாட்டில் வொஷிங்டனில் உள்ள ரஷ்யத் தூதரகத்தில் இருந்து அந்தநாட்டு அதிகாரிகள் 35 பேரை அமெரிக்கா அதிரடியாக நீக்கம் செய்துள்ளது. அத்துடன், அவர்கள் தமது குடும்பத்துடன் அமெரிக்காவை விட்டு 72 மணி நேரத்தில் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். (எ)

முதன்முதலில் ராணுவப் பயிற்சியில் இணைகின்றன சீனா-நேபாளம்

பீஜிங், டிசெ.31

சீனா மற்றும் நேபாளம் நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் இணைந்து முதன் முறையாக கூட்டுப் பயிற்சியை மேற் கொள்ள உள்ளனர்.

ஆசியக் கண்டத்தின் முக்கியமான 2 நாடுகளாக சீனாவும், நேபாளமும் உள்ளன. இந்நிலையில், சீனா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினர் அடுத்த வருட ஆரம்பத்தில் இணைந்து கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ள உள்ளனர்.

இதுதொடர்பாக சீன பாதுகாப்புத்துறைச் செய்தி தொடர்பாளர் யங்க்யு ஜூன் கூறுகையில்:-

''சீனா மற்றும் நேபாளம் தங்களது போர் பயிற்சி ஆரம்பிப்பது குறித்து பேசியுள்ளது. இதுதொடர்பான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்''- என்று தெரிவித்தார்.

தகவலின்படி, எதிர் வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்த இராணுவப் பயிற்சி நடைபெறும் என்றும், நேபாள இராணுவ வீரர்கள் சர்வதேசக் குழுக்களில் செயற்படுவது தொடர்பாகப் பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் நேபாளம் ஏற்கனவே இராணுவப் பயிற்சியை மேற்கொண்டு வந்துள்ளது. தற்போது முதல் முறையாகச் சீனாவுடன் பயிற்சியை மேற் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

புத்தாண்டு கொண்டாடச் சென்ற கிரேக்கத் தூதர் சடலமாக மீட்பு

பிரேசிலுக்கு புத்தாண்டு கொண்டாடுவதற்கு காரில் சென்ற கிரேக்கத் தூதர் தனது காருக்குள் எரிந்த நிலையில் சடலமாகக் கிடந்தார்.

பிரேசில் நாட்டின் கிரேக்கத் தூதராக கிரியகோஸ் அமிரிதிஸ் (வயது 59) பதவி வகித்தார். இவர் ரியோடி ஜெனிரோவில் உள்ள கிரேக்கத் தூதரகத்தில் பணிபுரிந்தார். அவரது வீடு நோவா இகுயாசூ நகரில் உள்ளது. இது ரியோடி ஜெனிரோவின் புறநகர்.

சம்பவ தினத்தன்று தூதர் பிரேசிலுக்கு புத்தாண்டு கொண்டாட காரில் பயணம் செய்தார். ஆனால் திடீரென அவர் மாயமானார். அதைத் தொடர்ந்து அவரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். இதற்கிடையே அவர் ரியோடி ஜெனிரோவில் தனது காருக்குள் எரிந்த நிலையில் சடலமாகக் கிடந்தார்.

அவர் பிணைத் தொகைக்காக மர்மக் கும்பலால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப் படுகிறது. அவர் இறந்ததற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகின்றது. (எ)

காலைக்கதிர் Kalaikkathir

முல்லைத்தீவு பாரதி , அன்பு , கிளிநொச்சி செஞ் சோலை இல்ல சிறுவர்களின் இவ்வருட முத்தமிழ் விழாவும் , நத்தார் விழாவும் முல்லைத்தீவு முள்ளிய வளை பாரதி சிறுவர் இல்லத்தின் கலையரங்க மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் நெர்டோ நிறுவனத்தின் செய லாளரும் இல்லத் தந்தையுமான செ.பத்மநாதன், கனடாவிலிருந்து வருகை தந்த இராசதுரை, இல்லத் தலைவர் வைத்திய கலாநிதி து.வி. ஜெயகுலராஜா, உப தலைவர் பரமேஸ்வரன், செயலாளர் கிருஷ்ண மூர்த்தி, கிராம சேவையாளர் திருமதி.ரஜிதா மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-54)

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா மடு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளரும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத் தலைவருமான யோண் குயின்ரஸ் தலைமையில் நடை பெற்றது. இந் நிகழ்வில் கலைஞர்கள் 'சமூக ஒளி', 'கலைச்சுடர்' விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

கோப்பாய் திருக்குறள் மன்றம் நடத்திய பாட சாலை மாணவர்களுக்கான திருக்குறள் அறிவியல் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா அண்மையில் மன்றத் தலைவர் க.தர்மராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ச.வேலழகனும் கலந்து கொண்டனர். கோப்பாய் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டிய முந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-21)

யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கால்நடை வளர்ப்பை ஊக் குவிக்கும் முகமாக கறவைப் பசு மாடுகளும், வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் கோழிக் குஞ்சுகள், கோழிக் கூடுகள் என்பனவும் வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசாவால் அண்மையில் வழங்கப்பட்டன.

பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவை வழங்கப்பட்டன. அத்துடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுயதொழிலாக கணினிப் பணியில் ஈடுபடும் ஒருவருக்கு கணினித் தொகுதியையும் வழங்கப்பட்டது. (ஐ-21)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க கனடா கிளையினர் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் ஊடாக கிளிநொச்சியில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல சிறுவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களையும் ஆண் சிறு வர்களுக்கு சப்பாத்துகளையும் வழங்கி உதவி யுள்ளார்கள். (ஐ-54)

நல்லூர் சங்கிலியன் மன்றத்துக்கு கதிரைகள் பற்றாக்குறையாக உள்ளது என்று மன்றத்தினரால், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனி டம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அண்மையில் ஒரு தொகுதி கதிரைகள் வழங்கப் பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்தக் கதிரைகளை வழங்கி னார் அங்கஜன். (ஐ-21)



யாழ். காதி அபூபக்கர் வீதியிலுள்ள சிவலை பள்ளி வாசலிலும் மழை வேண்டிப் பிரார்த்தனை இடம்பெற்றது. ஜனாதிபதியின் பணிப்புரைக்கேற்ப யாழ். பிரதேச செயலாளர் பொ.தயானந்தனின் வேண்டுகோளின்படி இந்தப் பிரார்த்தனையை மௌலவி அப்துல் அஸீஸ் ஏற்பாடு செய்திருந்தார்.

யாழ். கலாசார அதிகாரசபையின் உறுப்பினர்களும் பிரார்த்தனையின் போது சமுகமளித்திருந் தனர். (இ-19)

பதவியை இராஜினாமா செய்ய எண்ணினாராம் சனத் ஜயசூரிய!



கொழும்பு, டிசெ.31

கிரிக்கெட் தெரிவுக் குழு தலைவர் சனத் ஜயசூரிய, பதவியை இராஜினாமா செய்ய இருந்த நிலையில், அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் தனது தீர்மானத்தை மாற்றிக் கொண்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தங்கள் மற்றும் தீர்க்கப்படாத சில பிரச்சினைகள் காரணமாகவே சனத் ஜயசூரிய தனது பதவியை இராஜினாமா செய்ய எண்ணினார் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் பிரச்சினைக்குரிய நிலைமை தொடரும் பட்சத்தில் தன்னால், தனது கடமைகளை சரிவர நிறைவேற்ற முடியாது என்பதால் தனது பதவியை இராஜினாமா செய்யப் போவதாக சனத் ஜயசூரிய அண்மையில் தெரிவித் திருந்தார்.

முடிந்த அளவு அவசரமாக அந்தப் பிரச்சினை களை தீர்த்து வைப்பதற்கு நட வடிக்கை எடுப்பேன் என்று இதன்போது அமைச்சர் தயா சிறி ஜயசேகர உறுதியளித் துள்ளார் என்றும் தெரிவிக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையுடனான முதலாவது டெஸ்ட் போட்டி; 206 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி

போர்ட் எலிசபெத், டிசெ.31

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்டில், இலங்கை அணி 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

தென்னாபிரிக்கா சென் றுள்ள இலங்கை அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத் நகரில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 286, இலங்கை 205 ஓட்டங் களை எடுத்தன. தென்னா பிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட் டுக்கு 406 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத் திக்கொண்டது. நான்காவது நாள் ஆட்ட முடிவில், இலங்கை அணி இரண்டா வது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 240 ஓட்டங்களை எடுத்தி ருந்தது.

நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் இடம்பெற்றது. இலங்கை அணியின் மத்தியூஸ் (59 ஓட்டங்கள்), டிசில்வா (22 ஓட்டங்கள்), ஹேரத் (3 ஓட்டங்கள்), சமீரா (ஓட்டங்கள் எதுவுமில்லை) என, வரிசையாக வீழ்ந்த னர். கடைசியில் பிரதீப்பும் (4 ஓட்டங்கள்) ஆட்டமிழந் தார்.

ஒரு மணி நேரத்தில் 5 விக்கெட்டுகளை இழந்த இலங்கை அணி இரண் டாவது இன்னிங்ஸில் 281 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந் தது.

இதன்மூலம் தென்னா பிரிக்கா 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 1-0 என, தொட ரில் முன்னிலை பெற்றது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட், எதிர்வரும் 2 ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பமா கிறது.

ஆஸ்திரேலிய அனுசரணையுடன் வடக்கில் மெய்வல்லுநர் பயிற்சி முகாம்கள்

கொழும்பு, டிசெ.31

ஆஸ்திரேலிய அரசின் அனுசரணையுடன் ஆசிய விளையாட்டுத்துறை ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கையில் மெய்வல் லுநர்துறை சார்ந்த மூன்று பயிற்சி முகாம்கள் நடத்தப் படவுள்ளன. வட மாகாணத் துக்கான பயிற்சி முகாம் துரையப்பா விளையாட்டரங் கில் நடத்தப்படவுள்ளது.

உள்ளூர் பயிற்றுநர்க ளுக்கு வெளிநாட்டு பயிற் றுநர்களைக்கொண்டு இந்தப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி முகாம்கள் புத்தாண்டில் ஆரம்பமாகும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசே கர தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சும் இலங்கை மெய்வல்லுநர் சங்கமும் இணைந்து கல்வி அமைச் சின் ஒத்துழைப்பில் இந் தத் திட்டம் நடை முறைப்படுத்தப்பட வுள்ளது.

முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இந்த விசேட

மெய்வல்லுநர் விளையாட் டுத்துறை பயிற்சித் திட்டத் தின் ஆரம்பக் கட்டப் பயிற்சி முகாமில் விளை யாட்டுத்துறை கழகங்களின் பயிற்றுநர்களுக்கு ஆலோச னைகளும் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் உள்ளூர் மத்திய பயிற்றுநர் கள், விநோத விளை யாட்டுப் பயிற்றுநர்கள், சிறுவர் மெய்வல்லுநர்துறை மற்றும் இளையோர் மெய் வல்லுநர் துறைக்கான பயிற்றுநர்கள் ஆகியோ ருக்கு ஆலோசனையுடன் பயிற்சிகள் அளிக்கப்பட வுள்ளன.

வடக்கு மாகாணத்திற் கான பயிற்சி முகாம் யாழ். துரையப்பா விளையாட்ட ரங்கில் எதிர்வரும் ஜனவரி 10, 11, 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாம் களில் இலங்கையிலுள்ள சகல பயிற்றுநர்களும் கலந்துகொள்ள முடியும் என விளையாட்டுத்துறை அமைச்சு குறிப்பிடு கின்றது.

பயிற்சி முகாம்கள் தொடர்பான மேலதிக விவரங் களை 0777582094 என்ற தொலைபேசி இலக்கத்தில் காமினி கொஸ்தாவை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கிந்திய வீராங்கனை டொட்டினுக்குக் காயம்

மெல்போர்ன், டிசெ.31

ஆஸ்திரேலியாவில் பிக் பாஷ் கிரிக்கெட் போட்டி களில் பங்கேற்றுவரும் மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீராங்கனை டியேந்த்ரா டொட்டினுக்கு தாடையில் காயம் ஏற்பட் டுள்ளது.

பிறிஸ்பேன் ஹீட் அணிக்கும் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணிக்கும் இடையிலான போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட் டிருந்தபோது மற்றொரு வீராங்கனையுடன் மோதி யதால் டொட்டினின் தாடையில் காயம் ஏற்பட் டுள்ளது.

எனினும் தான் சுகமாக இருக்கிறார் என்று டொட்டின் தனது பேஸ் புக்கில் குறிப்பிட்டுள் ளார்.

அலன் போர்டர் பீல்ட் விளையாட்டரங்கில் மெக் லெனிங் ஓங்கி அடித்த பந்து எல்லைக் கோட்டைக் கடக்க விடாமல் தடுக்க டொட்டி னும் லோரா ஹெரிஸும் முயற் சித்த போதே டொட்டினிக் குக் காயமேற்பட்டுள்ளது.

தங்கம் வென்ற மாணவனுக்கு சமூர்த்தி வங்கி கௌரவம்

சாவகச்சேரி, டிசெ.31

தேசிய மட்ட கோலூன் றிப் பாய்தலில் தங்கம் வென்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் அ.புவிதரன் சமூர்த்தி வங்கி யால் கௌரவிக்கப்பட் டுள்ளார். சாவகச்சேரி சமூர்த்தி வங்கிக் கிளையின ரால் அண்மையில் இந்தக் கௌரவிப்பு விழா நடத் தப்பட்டது.

அத்துடன், சரசாலை வடக்கு சமூர்த்திப் பயனா ளிகளும் மாணவன் அ.புவிதரனை கௌரவித்து பரிசுப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

மேலும், சரசாலை உதயநிலா விளையாட்டுக் கழகத்தினர் மாணவனுக்கு 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் துவிச்சக்கர வண்டியும் வழங்கி யுள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற வர்ண இரவு கள் நிகழ்விலும் புவிதரன் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-21)

ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் வெற்றி; கடைசி நாளில் வீழ்ந்தது பாகிஸ்தான்

மெல்போர்ன், டிசெ.31

மெல்போர்ன் டெஸ்டில் கடைசி நாளில் திடீர் திருப்பம் ஏற்பட்டதால், ஆஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் ஆஸ்திரேலியா வென்றது. இரண்டாவது டெஸ்ட் மெல்போர்னில் நடந்தது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 443/9 (ஆட்டத்தை நிறுத்தியது) ஓட்டங்கள் எடுத்தது.

நான்காவது நாள் முடிவில், ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கு 465 ஓட்டங்கள் எடுத்து, 22 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. ஸ்மித் (100 ஓட்டங்கள்), மிட்சல் ஸ்டார்க் (7 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று கடைசி நாள்



ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி, 'மின்னல்' வேகத்தில் ஓட்டங்களை குவித்தது. அரைசதம் அடித்த ஸ்டார்க், 84 ஓட்டங்கள் ஆட்டமிழந்தார். லியான் 12 ஓட்டங்கள் எடுத்தார். உணவு இடைவேளைக்கு சற்று முன், முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்கு 624ஓட்டங்கள் குவித்து, 181 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற ஆஸ்திரேலியா, ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இன்னும் 68 ஓவர்கள் தாக்குப் பிடித்தால் போட்டியை சமநிலை செய்து விடலாம் என, களமிறங்கிய் பாகிஸ்தான் அணிக்கு அடுத்தடுத்து அதிர்ச்சிகள் கிடைத்தன.

இரண்டாவது ஓவரில் சமி அஸ்லாம் (2 ஓட்டங்கள்), ஹேசல்வுட்டிடம் வீழ்ந்தார். பாபர் ஆசம் (3 ஓட்டங்கள்), ஸ்டார்க்கிடம் சிக்கினார். மூத்த வீரர் யூனிஸ் கான் (24 ஓட்டங்கள்), அணித்தலைவர் மிஸ்பா (ஓட்டம் எதுவுமில்லை) இருவரும் லியானின் ஒரே ஓவரில் ஆட்டமிழக்க, பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுகளை (63 ஓட்டங்கள்) இழந்தது.

ஆசாத் சபிக் (16 ஓட்டங்கள்), தாக்குப்பிடித்த அசார் அலி (43 ஓட்டங்கள்) ஆட்டமிழக்க, அணியின் தோல்வி உறுதியானது.

முகமது ஆமிர் (11 ஓட்டங்கள்), சர்பராஸ் அகமது (43 ஓட்டங்கள்) ஏமாற்றம் கொடுத்தனர். வகாப் ரியாஸ், யாசிர் ஷா என, இருவரும், ஸ்டார்க் வேகத்தில் 'டக்' அவுட்டாகினர்.

பாகிஸ்தான் அணி 53.2 ஓவரில் 16ஓட்டங்கள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 2-0 என, தொடரைக் கைப்பற்றியது.

ஸ்டார்க் 4, லியான் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இரு அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட், எதிர்வரும் 3 ஆம் திகதி சிட்னியில் இடம்பெறவுள்ளது.

ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கு மீண்டும் திரும்ப முடியுமென ஜுனைத் கான் நம்பிக்கை



இஸ்லாமாபாத், டிசெ.31

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியில் மீண்டும் தான் இடம் பெறமுடியும் என நம்புகிறேன் என ஜுனைத் கான் தெரிவித்துள்ளார்.

27 வயதான ஜுனைத் கான், இறுதியாக 2015 ஆம் ஆண்டு ஒருநாள் சர்வதேச போட்டியில் பங்குபற்றினார்.

நடைபெற்ற பங்களாதேஷ் பிறீமியர் லீக் (பீ.பி.எல்.) போட்டிகளில் தான் பிரகாசித்ததையடுத்து, ஒருநாள் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியில் தனக்கு வாய்ப்பு கிடைக்கும் என அவர் எதிர்பார்க்கிறார்.

பீ.பி.எல். சுற்றுப் போட்டியில் குல்னா டைட்டான் அணி சார்பாக விளையாடிய ஜுனைத் கான் அத்தொடரில் 20 விக்கெட்களை கைப்பற்றி, அத்தொடரில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரர்கள் வரிசையில் 2 ஆவது இடத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் ஜுனைத் கான் தெரிவித்தவை வருமாறு:-

பீ.பி.எல். போட்டிகளில் விக்கெட்களை வீழ்த்தியதைவிட, என்னால் இப்போது சிறப்பாக பந்துவீச முடிகிறது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது தன்னம்பிக்கை மீளத் திரும்பியுள்ளது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நான் விளையாடியதைப்போல் இப்போதும் சிறந்த நிலையில் உள்ளேன் என உணர்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

அனுஷ்கா சர்மாவுடன் நிச்சயதார்த்தம்; விராட் கோஹ்லி விளக்கம்

டில்லி, டிசெ.31

விராட் கோஹ்லிக்கும் அவருடைய காதலி நடிகை அனுஷ்கா சர்மாவுக்கும் நிச்சயதார்த்தம் நடக்கவுள்ளதாகச் செய்திகள் வெளியானதையடுத்து, விராட் கோஹ்லி விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

நாங்கள் நிச்சயதார்த்தம் செய்துகொள்ளவில்லை. அப்படிச் செய்ய இருந்தால் அதை எல்லோருக்கும் சொல்வேன். மறைக்கமாட்டேன். அவ்வளவுதான். செய்தித் தொலைக்காட்சிகள், வதந்தியான செய்திகளைச் சொல்லி உங்களைக் குழப்புவதால் இதைச் சொல்லவேண்டியிருக்கிறது என்று கூறியுள்ளார்.

அமெரிக்காவின் டென்னிஸ் சூறாவளி செரீனா திருமணத்துக்குத் தயாராகிறார்!

நியூயோர்க், டிசெ.31

பிரபல அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தொழிலதிபரை திருமணம் செய்யவுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

டென்னிஸ் களத்தில் தொடர்ந்து பட்டையை கிளப்பி வந்த செரீனா நீண்ட நாள்களாக தரவரிசையில் முதல் இடத்தில் இருந்தார். தற்போது அவர் 2 ஆவது இடத்தில் உள்ளார்.

இந்த நிலையில் அலெக்சிஸ், ரெட்டிட் இணையதளத்தின் உரிமையாளரான அலெக்சிஸ் ஒஹனியனை திருமணம் செய்யப்போகிறேன் என்று செரீனா வில்லியம்ஸ் அறிவித்து உள்ளார்.

ரோம் நகரில்தான்

இருவரும் முதன்முதலில் சந்தித்தனர். அப்போது செரீனாவிடம் அலெக்சிஸ் காதலை கூற அவரும் அதை ஏற்றுக்கொண்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இருவரும் தீவிரமாக காதலித்து வந்தனர். இந்த நிலையில் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.

நிச்சயதார்த்தத்தை ரோமில் நடத்த உள்ளனர்.

நில வாடகை வரி அதிகரிப்புக்கு எதிராக நெல்லியடி சந்தை வர்த்தகர் போர்க்கொடி

நாளை பகிஷ்கரிப்புக்கும் முஸ்தீபு

கரவெட்டிப் பிரதேச சபை வரி அதிகரிப்பை நடைமுறைப் படுத்தினால் புதிய ஆண்டு தொடக்கமான நாளை ஞாயிற் றுக்கிழமைதாங்கள்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என நெல்லியடிச் சந்தை வர்த் தகர்கள் தெரிவித்துள்ள னர்.

சந்தையில்வியாபாரம்செய் யும் வர்த்தகர்களிடம் 2017 ஆம் ஆண்டுதொடக்கம்நிலவாடகை வரியை 10 வீதம் அதிகரித்து அற விடுவதற்கு பிரதேச சபை தீர்மா னித்தது. இதற்கு வர்த்தகர்கள் எதிர்ப் புக் காட்டியமையால் நேற் றைய தினம் பிரதேச சபையில் அவர்களுக்கானகலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை உறுப்பி னர்களான எஸ்.அகிலதாஸ், வி.சிவயோகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், 10 வீத வரி அதிகரிப்பை ஐந்து வீத மாகக் குறைப்பதற்கு நடவ டிக்கை எடுப்பார் என பிரதேச சபைச் செயலாளர் அ.வினோ ராஜ் தெரி வித்தார். அதனை ஏற்க மறுத்த வியாபாரிகள் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரி அதிகரிப்பு நடைமுறைப் படுத்தப்பட்டால் தாம் பகிஷ் கரிப்பில் ஈடுபடுவார்கள் எனத் தெரிவித்து கூட்டத்தில் இருந்து வெளியேறினர்.

ஆனால், சந்தையில் வியா பாரிகள் குழப்பம் விளைவித் தால் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்று பிரதேச சபைச் செயலாளர் எச்சரித்துமுள்ளார்.

(மு-40)

இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். இந்தியா துணைப் பங் கையே ஆற்றியிருந்தது.

"சிறிலங்கா, மியான்மார், நைஜீரியாவில் ஆட்சிமாற்றங் களை ஏற்படுத்துவதற்கு, 648 மில்லியன்டொலரைச்செலவிட் டுள்ளதாக அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

"இப்போதும் கூட இலங்கை யில் நாடாளுமன்ற உறுப்பினர் களின் அபிவிருத்திக்காக நூறு கோடி ரூபாவை அரசு செலவிடு கிறது.

"தற்போதைய அரசு அமெ ரிக்காவுடன் நேசம் பாராட்டிவரு கிறது. இலங்கை அதிகாரி களுக்கு அவர்கள் பயிற்சி அளிக் கிறார்கள்.

"அமெரிக்கர்கள் வந்து நாட்டை ஆட்சி செய்கிறார்கள்." – என்றும் மஹிந்த ராஜபக்ஷ கோபத்துடன் குறிப்பிட்டார்.

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில் இந்தியா எலியைப் போல அமைதியாக இருப்பதாக வும் மஹிந்த ராஜபக்ஷ குறிப் பிட்டார்.

எனது ஆட்சிக்காலத்தில்சீன நீர்மூழ்கிகள் கொழும்பு துறை முகத்துக்கு வந்த போது, இந் திய நண்பர்கள் எல்லோருமே எனக்கு எதிராகக் குரல் எழுப் பினர். ஆனால் இப்போது அவர் கள் எலியைப் போல அமைதி யாக இருக்கின்றனர்.

அப்போது அவர்கள் வெளிப் படையாகவே எதிர்ப்புத் தெரிவித் தனர்.

திருகோணமலை, காங் கேசன்துறை துறைமுகங்கள் அல்லது பலாலி விமான நிலையத்தைமைத்திரிபாலசிறி சேன அரசாங்கம் தம்மிடம் தரும் என்று எதிர்பார்த்து, இந் தியா இப்போது மௌனமாக இருக்கக்கூடும்.

இந்தியாவுடன் 'எட்கா' உடன் பாடு செய்து கொள்ளக் கூடாது. இந்த உடன்பாட்டை செய்து கொள்வதற்கு ரணில் விக்கிரம சிங்க அழுத்தம் கொடுக்கிறார்.

ஆனால், இந்தியா இதனைச் செய்து கொள்ளக் கூடாது. இந்த விடயத்தில் இந்தியா கவனமாக இருக்க வேண்டும்.

ஏனென்றால் மக்கள் எதிராக இருக்கும் போது, இந்த உடன் பாட்டை செய்து கொள்வது இந்தி யாவுக்கும் நல்லதல்ல. எமக்கும் நல்லதல்ல."– என்றார் அவர்.

தனது ஆட்சியை வீழ்த்து வதற்கு அமைச்சர் சம்பிக்கவும் பொதுபலசேனாவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டன என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களைத் தாக்கி திட்டமிட்ட முறையில் அவர் களைத் தன்னிடமிருந்து பிரித்த தாக பொதுபலசேனா அமைப் பின் மீது மஹிந்த குற்றஞ்சாட்டி னார்.

தான் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் பொதுபலசேனா போன்ற அமைப்புக்களை எவ் வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பது தனக்குத் தெரியும் என்றும் அவர் அப்போது மேலும் தெரிவித்துள்ளார்.

சுகாதாரட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெங்கு நுளம்புத் தாக்கம் உட்பட பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் தலைவிரித் தாடும் இச்சமயத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தங் கள் தொழிற் சங்க நடவடிக்கை குறித்துமக்களுக்குக்கூடபகிரங் கமாகத்தகவல்தெரிவிக்காமல், மறைமுகமாக இத்தகைய தொழிற் சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றமை குறித்து சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பும், விசனமும், கண்டனமும் தெரிவிக்கின்றனர்.

கடந்தவருடமும்இடமாற்றத் தைக் காட்டி இவ்வாறான தொரு நடவடிக்கையில் சுகா தாரப் பரிசோதகர்கள் ஈடுபட் டமையும், அதனால் சமூகப் பாதிப்புஏற்பட்டமையும்குறிப்பி டத்தக்கது. (உ)

கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பது தெரிந்ததே. இதை ஒட்டியே மேற்படி கருத்தை சுரேஷ்பிரேமச்சந்திரன் வெளி யிட்டிருக்கின்றார்.

வடக்கு மாகாணத்தில் 'எழுக தமிழ்' போராட்டத்தின் ஊடாக மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளை மிகத் தெளி வாக முன்வைத்தார்கள்.

வடக்கு – கிழக்கு என்பன இணைக்கப்படவேண்டும், ஒரு சமஷ்டி அரசமைப்பு முறை உருவாக்கப்பட வேண்டும், காணாமல்போனோருக்கான அலுவலகம் உருவாக்கப்பட் டுத் தீர்வுகள் கண்டறியப்பட வேண்டும், அரசியல்கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என் பன உள்ளிட்ட பல கோரிக்கை கள் அங்கு முன்வைக்கப்பட் டன.

தமிழ்மக்கள் பேரவையும் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்துள்ள ஈ.பி.ஆர். எல்.எவ், ரெலோ, தமிழரசுக் கட்சியினுடைய ஒரு பிரிவினர் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்ற சகலரும் இணைந்துகிழக்குமாகாணத்தி லும் 'எழுக தமிழ்' பேரணியை நடத்துவற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர். பல்வேறு கிராமங்களிலும் அதற்கான பிரசாரங்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

வடக்கு – கிழக்கு என்பன இணைக்கப்பட வேண்டும் என் பது தமிழ் மக்கள் முன்வைத்த கோரிக்கை. இன்றைய கால கட்டத்தில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் ஊடாகவும், அரசின் மேலாதிக்க எண்ணங் களின்ஊடாகவும்வடக்கையும் கிழக்கையும் முற்றுமுழுதாக சிங்கள பௌத்த மாகாணங் களாகமாற்றக்கூடியசூழ்நிலை இருக்கின்றது.

இந்த நிலையில் வடக்கு– கிழக்குஎன்பனஇணைக்கப்படு வதால் மாத்திரம்தான் தமிழ் மக்கள் மாத்திரமல்ல தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் கூட தங்களது இனத்துவ அடையா ளங்களைக் காப்பாற்றிக் கொண்டு ஒரே மொழி பேசக் கூடியவர்கள் என்ற அடிப்படை யில் அந்த மண்ணில் சுதந்திர மாகவும், கௌரவமாகவும் வாழ முடியும். –எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:–

இலங்கைக் கடற்பரப்பை ஊடுருவும் இந்திய மீனவர் களின் எண்ணிக்கையில் தற் போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கடற்பரப்புக்குள் அத்துமீறிப்பிரவேசிக்கும்மீன வர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. இதன்காரணமாகமீனவர் களின் ஊடுருவல் 50 சதவீதத் தால் வீழ்ச்சி அடைந்துள்ளது. இலங்கைக்கடல்எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில்ஈடுபட்ட தமிழக மீனவர்களது படகு களையோமீன்பிடிஉபகரணங் களையோ நாம் அவர்களுக் குத் திருப்பிக் கையளிக்கப் போவதில்லை.

மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துவதில் தென்னிந் தியமீனவர்களின்அத்துமீறலே பிரதான சவாலாக உள்ளது. இதற்குஇறுதித்தீர்வுகாண்பதற் காக இராஜதந்திர மட்டத்தில் பேச்சு நடத்தி வருகின்றோம். இதற்கான அதிகாரிகள் மட்டப் பேச்சுதற்பொழுதுஆரம்பிக்கப் பட்டுள்ளது. இராஜதந்திர மட் டத்திலான மற்றொரு பேச்சு ஜனவரி 2ஆம் திகதி கொழும் பில் நடைபெறவுள்ளது.

தற்பொழுது 122 இழுவைப் படகுகளுடன்மேலும்140நாட் டுப் படகுகளும் கைப்பற்றப் பட்டுள்ளன. இவற்றுடன் கைப் பற்றப்பட்ட உபகரணங்கள் எல்லாம்அரசுடமையாக்கப்பட் டுள்ளன. அரசுடமையாக்கப் பட்ட படகுகளையோ உபகர ணங்களையோநாம்விடுவிக்க மாட்டோம். கைது செய்யப் பட்டுள்ள சகல இந்திய மீனவர் களையும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய விடுதலை செய் வதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. –என் றார்.

10 லட்சம் ரூபா செலவில் நிர் மாணிக்கப்பட்ட மீனவ சன சமூக நிலையமும் இந்த நிகழ் வில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கட்டுமரத்தில் உயிரிழப்பு; மாரடைப்பே காரணமாம்!

மன்னார், டிசெ.31

தலைமன்னாரில் மீன்பிடிப் பதற்காகச் சென்ற போது மர ணமடைந்தவர் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்துள் ளார் என பிரேத பரிசோதனை யில் தெரியவந்துள்ளது.

கட்டுமரத்தின்மூலம்மீன்பிடி யில் ஈடுபட்டு வந்த தலைமன் னாரைச்சேர்ந்த63வயதுடைய லோறன்ஸ் கொன்சல்லேயம் என்பவர் கடந்த செவ்வாய்க் கிழமை உயிரிழந்த நிலையில் கடற்கரையில் இருந்த அவரது கட்டுமரத்திலிருந்து சடலமாக அவர் மீட்கப்பட் டார்.

இவரதுமரணவிசாரணையை மன்னார் மரண விசாரணை அதிகாரி எஸ்.ஈ.குணகுமார் மேற் கொண்டார்.

'இறந்தவர் எனது தந்தை. இவர் வழமையாக தலைமன் னார் கடலில் கட்டுமரத்தின் மூலம் நண்டு வலைத் தொழி லுக்குச் செல்பவர். சில சமயங் களில் இவர் நெஞ்சு வலியால் அவதிப்படுவதுண்டு. இவருக் குக்குடிப்பழக்கம்உண்டு.'என மரண விசாரணையில் சாட்சி யமளித்த இறந்தவரின் மகன் கொன்சல் கிறிஸ்துராஜ் கூறி னார்.

அவரது பிரதே பரிசோதனை மன்னார் பொது வைத்திய சாலையில் மேற்கொள்ளப் பட்டபோதுமாரடைப்புக்காரண மாகவேமரணம்ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (112)

மாற்றுத் திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

வழங்கநடவடிக்கை;பதிவுசெய்யக்கோரிக்கை

கிளிநொச்சியில்உள்ளமாற் றுத் திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கநடவடிக்கைஎடுக்கப் பட்டு வருவதால், வாகனங் களைப் பயன்படுத்தும் மாற் றுத்திறனாளிகள்தமது பெயர் விவரங்களைப் பதிவுசெய்யு மாறு மாற்றுத் திறனாளிகள் சங்கம் கோரியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அமைச்சு மற்றும் தி ணைக்களங்களுக்கு விவ ரங்கள் அனுப்பவேண்டியிருக் கின்றது. இதனால், உரியவிண் ணப்பதாரிகள் தமது விவரங் களை எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதிக்கு முன் னர் கிளிநொச்சி உதயநகர் முத்துமாரி அம்மன் வீதியில் அமைந்துள்ளமாற்றுத்திறனா ளிகள் சங்கத்தில் பதிவுசெய்யு மாறு சங்கம் கேட்டுக்கொண் டுள்ளது. (மு-70)

சம்பந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருமாறுகதறிஅழுதனர். அவர் கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு எதிராகவும் பல கோஷங் களை எழுப்பினர்.

மைத்திரிபால சிறிசேன – ரணில்விக்கிரமசிங்கதலைமை யிலான நல்லாட்சி அரசில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் பங்காளர்களாக மாறியதால் தமிழ்மக்களுக்குஎந்தப்பிரயோ சனமும் இல்லை என்றும் அவர் கள் குற்றம்சாட்டினர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் முடிவில் அவர் கள்அனைவரும்சிறியபேரணி யாகச் சென்று இரா.சம்பந்த னின் புகைப்படம் ஒன்றுக்குத் தீ மூட்டினர். இந்தச் செயற்பாடு களில்ஈடுபட்டவர்களில்அதிகமா னோர் பெண்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (விரிவான செய்தி 03 ஆம் பக்கத்தில்)

(மு-40-100)

பேசித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஷ ஒப்புக்கொண்டார்.

"பொதுமக்களுக்கு அடிப் படை வசதிகள் கிடைக்க வேண் டும் என்று நினைத்தேன். அதில் நான் அரசியல் செய்யவில்லை. உயிர் வாழ்வதற்குத் தேவை யான எல்லாவற்றையும் முத லில் கொடுத்தேன்.

துரதிஷ்டவசமாக மக்களின் தேவைகளைத் தவறாக மதிப் பிட்டு விட்டேன். வடக்கிலுள்ள தமிழர்கள் 2015இல் எனக்கு எதிராக வாக்களித்தனர்.

இதில் அரசியல்வாதிகளும் புலம்பெயர்ந்தோரும் செல் வாக்குச் செலுத்தினர்.

அரசியல்தீர்வுநோக்கிச்செல் வதற்கு நான் சம்பந்தனுக்கும், ஏனைய அரசியல்கட்சிகளுக் கும் அழைப்பு விடுத்தேன்.

அந்த நேரத்தில் அவர்கள் என்னுடன் இணைந்துஎதையும் செய்ய விரும்பவில்லை.

என்னுடன் கலந்துரையாடு வதற்குக் கூட அவர்கள் விரும்ப வில்லை." – என்றார் அவர்.

(உ)

பனைத் தீராந்திகள் மீட்கப்பட்டன

வெற்றிலைக்கேணிப் பகுதி யில் உள்ள காணி ஒன்றினுள் இருந்து நேற்று 56 பனைமரத் தீராந்திகள் கைப்பற்றப்பட் டுள்ளன.

பனைமரங்கள் நிறைந்த காணிஒன்றுக்குள்சட்டவிரோத மான முறையில் தீராந்திகள் அறுக்கப்பட்டுஅடுக்கிவைக்கப் பட்டுள்ளனஎனபொலிஸாருக் குக் கிடைத்த இரகசியத் தக வலையடுத்து அங்கு சென்ற பொலிஸ் குழுவினர் தீராந்தி களைக் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தீராந்தி களின் பெறுமதி தொடர்பில் மரக்கூட்டுத்தாபனத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது எனப்பளைபொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிஏ.எஸ்.டபிள்யு ரஞ்சன பண்டார கூறினார்.

இராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜினாமாச் செய்யத் தீர் மானித்தார் எனவும் கூறப்படு கின்றது.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி அமைச்சின் உயரதி காரிஒருவர்கருத்துதெரிவிக்கை யில், இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன ராஜினாமா தொடர்பான செய்தி இது வரை உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்படவில்லைஎன்றுகூறினார்.

ஆனாலும், நேற்றுக்காலை அமைச்சர் தனது உத்தியோக பூர்வ வாகனத்தை அமைச்சில் கையளித்துவிட்டார்என்றுஅவர் கூறினார்.

பிறக்கும் புத்தாண்டில் தற் போதைய ஆட்சியைக் கவிழ்ப் பேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சூளுரைத்த பின்னணியிலேயே இவர் இராஜினாமாச் செய்ய முன்வந் தார் எனக் கூறப்படுகின்றது.

இவரது இராஜினாமாவை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன ஏற்கவில்லை என்றும், அவரை நேற்று மதியம் ஜனாதி பதி சந்திக்க அழைத்திருந்தார் என்றும் மற்றொரு செய்தி தெரி வித்தது.

சந்திப்பை அடுத்து தமது இராஜினாமாமுடிவைவிலக்கிக் கொள்ள பிரதியமைச்சர் பியங் கார இணங்கினாரா என்பது தெரியவில்லை. (உ)

காலைக்கதிர் Kalaikkathir

சமஷ்டிக்கு எதிராக லண்டனில் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம்!

அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிராக லண்டனில் வசிக்கும் சிங்களவர்கள் அண்மையில்ஆர்ப்பாட்டமொன்றைமேற் கொண்டனர்.

இலங்கையின் தேசியக் கொடியையும்சிங்களம்மற்றும் ஆங்கில மொழிகளிலான பதா கைகளையும் ஏந்தியவாறு இவர்கள்இந்தஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பி னதும் அமெரிக்கா, ஐரோப்பா, கனடா போன்ற நாடுகளினதும் விருப்பத்துக்கமைய அரசு சமஷ்டிஅரசமைப்பைக்கொண்டு வரவுள்ளது என்று தெரிவித்தே அதற்கு ஆட்சேபம்தெரிவிக்கும் விதத்தில் லண்டனில் வசிக்கும் சிங்களவர்களால்இந்தஆர்ப்பாட் டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தனியார் ஆஸ்பத்திரியில் வைத்தியர் ஒருவர் மீது தாக்குதல்!

கொழும்பு தனியார் வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான நிரோன் மகேந்திர மெண்டிஸ் என்ற வைத்தியருக்கு தற்போது அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவருகின்றதுஎனபொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை வைத்தியசாலை வளாகத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வைத்தியசாலைக்குள் வைத்து வைத்தியர்தாக்கப்பட்டசம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் இன்று ஊடகவியலாளர் சந்திப்பு

மட்டக்களப்பில்ஊடகவியலாளர்களுக்குஎதிராகஇடம்பெற்றுவருகின்ற அடக்குமுறைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகவியலாளர்சந்திப்புஒன்று இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்இன்றுபிற்பகல் 2.30மணியளவில்மட்டக்களப்பு டெலிக்கொம் வீதியில் உள்ள ஒன்றியத்தின் காரியாலயத்தில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதில்அனைத்துஊடகவியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்கேட்டுக்கொண்டுள்ளது. (மு)

மஹிந்தவைப் புறக்கணித்த ஹிருணிகா எம்.பி.

முன்னாள்பிரதமர்ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்ஹிருணிகாபிரேமச்சந்திர ஆகியோர் சென்றிருந்தனர்.

இவர்கள் இருவரும் நீண்ட நாள்களுக்குப் பின்னர் ஒரே நேரத்தில் சந்தித்துள்ள போதிலும், இருவரும்ஒருவருக்குஒரு வர்கதைத்துக்கொள்ளவில்லை.

மஹிந்த ஹிருணிகாவைப் பார்த்துபுன்னகைத்தபோதிலும் ஹிருணிகா யாரோ தெரியாதவர் போன்று வேறு எங்கேயோ பார்த்துள்ளார்.

சீனாவுக்கு வழங்கப்பட்ட காணியை அளவிடும் பணிகள் இடைநிறுத்தம்

மக்களின் எதிர்ப்பே காரணமாம்

அம்பாந்தோட்டையில் சீன முதலீட்டு திட்டத்துக்காக வழங்கப்பட இருந்த 15 ஆயிரம்ஏக்கர் காணிகளை அளவிடும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என காணி அமைச்சின்செயலாளர்ஜ.எச். கே. மஹானாம கூறினார்.

அந்தக் காணிகளைச் சுவீகரிப்பதற்கு மக்களிடம் இருந்து எழுந்துள்ள எதிர்ப்புக் காரணமாகவே இந்தநடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக சீனாவுக்கு வழங்கப்பட உள்ள அம்பாந்தோட்டை பிரதேச காணிகளை அடையாளம் காணும் பணிகள் தற்போதும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன என அபிவிருத்திமூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சர் மலிக் சமரவிக்ரம கூறுகின்றார்.

காணிகளைபெற்றுக்கொள்ளும் போது மக்கள் வசிக்காத காணிகள் மற்றும் அரசுக்கு சொந்தமான காணிகளுக்கே முதலிடம் கொடுப்படுகின்றன எனவும் அமைச்சர் கூறினார்.

பொதுமக்களின்காணிகள் பெற்றுக்கொள்ளப்படுமாயின் அவர்களுக்குநியாயமானஇழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (மு)

அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் ஜனவரி 6 இல் மீண்டும் ஆர்ப்பாட்டம்

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அகில இலங்கை துறைமுக ஊழியர்கள் சங்கத்தால் அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனவரி 6ஆம் திகதி இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனவரி 6ஆம் திகதி முதல் தாங்கள்எதிர்ப்புஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் வாகனங்களில் கறுப்புக் கொடிகளை ஏற்றியும் கறுப்புப்பட்டி அணிந்தும் கடமைக்குச் சமுகமளிக்கவுள்ளனர் எனவும் அந்தச் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்பனை செய்யவேண்டாம் எனவும் தமது தொழிலை நிரந்தரமாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி கடந்த 7ஆம் திகதி முதல் தொடர் பணிப் பகிஷ்கரிப்பில் அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

தோல் தொற்று நோய் மணல் ஈக்களால் பரவுகிறதாம்!

மணல்ஈக்களால்புதியவகையான தோல் தொற்று வியாதி ஒன்று பரவி வருகின்றது என பேராதனை பல்கலைக்கழகத்தின் ஒட்டுண்ணியியல் துறைத் தலைவர் கலாநிதி டபிள்யு. டி.எஸ்.ஜே.விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாணத்தில் இந்ததோல்வியாதிபெருமளவில் அடையாளம் காணப்பட்டுள்ளது. பதவியா, அநுராதபுரம், பொலன்னறுவை, அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை ஆகிய இடங்களைச் சேர்ந்த 2500 பேர் இந்த தோல் நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும்அவர்மேலும்கூறினார்.

பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் ஒருநாள் விடுமுறை வழங்க யோசனை

மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31

மாதவிடாய்க் காலத்தில் பெண்களுக்கு ஒருநாள் விடுமுறை வழங்கும் யோசனை அடங்கிய அமைச்சரவைப் பத்திரத்தைத் தாம் தாக்கல் செய்யவுள்ளார் என மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.

சீனாவில் வேலைகளில் ஈடுபடும்பெண்களுக்குஇதுபோன்ற நடைமுறை அமுல்படுத்தப்படுகின்றதுஎன்றும்அந்தமுறையை இலங்கையிலும்கொண்டுவரத் தான் உத்தேசித்துள்ளார் என வும் அவர் கூறினார்.

வேலைகளுக்குச் செல்லும் பெண்கள் மாதவிடாய்க் காலத்தில்வலியைத்தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது நலன்கருதியே இவ்வாறான யோசனையொன்று முன்வைக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்றதொருயோசனை இதுவரைக்கும் எவராலும் முன்வைக்கப்படவில்லை என்றும் இந்த யோசனை முன்வைக்கப்பட்டபின்னர்நடைமுறையில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் விவாதிக்கத்தான்தயாராக உள்ளார்எனவும்அவர்மேலும்தெரிவித்துள்ளார். (மு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக் கூட்டம் திங்களன்று

செயலாளர் யார் என்ற விடயம் ஆராயப்படும்

கொழும்பு, டிசெ.31

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சியின்உத்தியோகபூர்வ செயலாளர் நியமனம் தொடர்பில் ஆராய்வதற்காக அதன் உயர்பீடக் கூட்டம் நாளை மறுதினம்திங்கட்கிழமைமாலை6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டம் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாத்தில் நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.சி.ஹஸனலியும்கலந்துகொள்ளவுள்ளார்.

அதன்போதுகட்சியின்பேராளர் மாநாடு தொடர்பில் ஆராயப்படவுள்ளதுடன் மாநாட்டை நடத்தும் திகதி மற்றும் இடமும் தீர்மானிக்கப்படும்.

மேலும், பேராளர்மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள யாப்புத் திருத்தம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளது. (மு)

அம்பாள் ரெக்ஸ்
மெகா சேல்ஸ்
வைகிருப்பு உள்ளவரை
நத்தார் மற்றும் புது வருடத்தை முன்னிட்டு விசேட கழிவு விற்பனை
ஒரே விலையுள்ள இரண்டு சாரிகள், சல்வார் துணிகள், சல்வார்கள், மற்றும் ரோப் இவையும் பேற்று அதே விலையுள்ள மற்றொன்றினை இலவசமாகப் பேற்றுக் கோள்ளுங்கள்.
கொட்டன் துணிகள் ஒரு மீற்றர் 130/-
அம்பாள் ரெக்ஸ்,
புதிய பாதுகாப்பு சபை கட்டத்தெதிரத்,
முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

காலைக்கதிர்
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 222 3000

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் (புத்தகக் கடல்) மலிவு விற்பனையும்
புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், பாடசாலை சீருடைத் துணிகள் என்பவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.